பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 11 திங்கட்கிழமை (24.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :59

மாநகர சபை யாழ்ப்பாணம்

# ஜனவரி 26ஆம் திகதி புலிகளால் தேசிய துக்கதினமாகப் பிரகடனம்

ஆழிப்பேரலையில் சிக்கி பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்ததன் நினைவாக நாளை மறுதினம் புதன்கிழமையை விடுதலைப் புலிகள் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இயற்கைப் பேரனர்த்தம் நிகழ்ந்த 31ஆவது நினைவுநாள் அன்றாகும்.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்கள் சொல்லொணாத் துயரையும் அழிவையும் சேதத்தையும் அனுபவித்துள்ளனர். போர் நடந்த இரு தசாப்தங்களிலும் அனைத்தும் அவர்களைப் பாதிப்பதாகவே அமைந்திருந்தன.

யுத்தநிறுத்தம் அவர்களது வாழ்வில் மாற்றத்திற்கான ஓர் ஆரம்ப வாய்ப்பைக் கொடுத்தது. அதிலும் குறிப்பாகக் கரையோரத்தில் வாழும் மக்கள் மெல்ல மீண்டெழ ஆரம்பித்தார்கள். அவர்கள் வாழ்வில் ஓரளவுக்கு இயல்புநிலை தோன்றியதாக அவர்கள் கருதினார்கள்.

இந்தப் பின்னணியில் கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஆழிப்பேரலை தென் ஆசியக் கரையோரத்தைத் தாக்கியது. எமது தாயகத்தையும் அது பாதித்தது; அழிவையும் நாசத்தையும் ஏற்படுத்தியது.

தமிழர் தாயகத்தில் வாழும் எமது உறவுகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.24

சுனாமி அனர்த்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் ஒரு பகுதியினருக்கு உடனடியாக வழங்கப்படவுள்ளன.

இந்தத்தகவலை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு அரசு

(16ஆம் பக்கம் பார்க்க)

# சு.க. - ஜே.வி.பி. மோதல் உச்சம்!

## அரசியல் ரீதியாக இணைந்து இனி செயற்படுவதில்லை என ரில்வின் மிரட்டல்

கொழும்பு,ஜனவரி24

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அதன் கூட்டாளிக் கட்சியான ஜே.வி.பிக்கும், இடையிலான 'லடாய்' உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது. இரு கட்சிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் முறிந்துவிட்டன. ஜே.வி.பி. தரப்பிலிருந்து சு.கட்சிக்குச் காரசாரமான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உரிய பதில் கிடைக்காவிட்டால் உறவையே முறித்துக்கொள்ளப் போவதாகவும் ஜே.வி.பி. அச்சுறுத்தல் விடுத்துள்ளது. இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை சு.க. புறக்கணிப்பதற்கான காரணத்தை அக்கட்சி தெளிவுபடுத்தும்வரை அரசியல் ரீதியாக இணைந்து செயற்படப் போவதில்லை என்று ஜே.வி.பி. திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.**

அரசு அண்மைக் காலங்களில் ஜே.வி.பியை திட்டமிட்டு ஓரம்கட்டி வருவதாகவும், அரச ஊடகங்களில் ஜே.வி.பியின் செயற்பாடுகளுக்கு இருட்டடிப்புச் செய்வதாகவும் தெரிவித்து ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா, ஸ்ரீல.சு.கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஊடகத்துறைகள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் காரசாரமான இரண்டு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

ஸ்ரீல.சு.கட்சிக்கும். ஜே.வி.பிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதியாலும், சிரேஷ்ட அமைச்சர்களாலும் முற்றாகவே உதாசீனப்படுத்தப்பட்டுள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## பீற்றர்ஸன் நேற்று பிரதமருடன் பேச்சு

கொழும்பு.ஜன.24

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசிய பின்னர் பீற்றர்ஸன், அரச தலைவர் ஒருவரை சந்தித்துள்ளார் என்ற வகையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றது என்று கூறப்பட்டது.

இரு தலைவர்களுக்கும் இடையில் மிக நல்ல கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. இந்தச் சிக்கலான நேரத்தில் நோர்வே செய்து வரும் உதவிகளுக்குப் பிரதமர் நன்றி தெரிவித்தார் - என்று இந்தச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த பிரதமரின் செயலர் லலித் வீரதுங்க கூறினார்.

ஆனால், ஆழிப்பேரலை நிவாரணப் பணி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை புனர்நிர்மாணப் பணிகளில் புலிகளைச் சேர்ப்பதை ஜே.வி.பி. ஏற்காது

### அக்கட்சித் தலைவர் சோமவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு.ஜன.24

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான வடக்கு - கிழக்கு புனர்நிர்மாண. நிவாரண நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களில் உதவிப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஜே.வி.பியின் நிவாரணப் பணிக் குழுவினர் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முறையான அரசு ஒன்று அதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில். ஆயுதம் தாங்கி அரசை எதிர்த்துப் போராடிய இயக்கம் ஒன்றை உள்ளீர்க்க முடியாது. அப்படிச் செய்வது அந்த ஆயுதக்குழுவின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதாகவே அமையும். இதனை ஜே.வி பி. ஒரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன், பிரட்ஸ்கர் மீண்டும் இன்று கிளிநொச்சி வருகின்றனர்

கிளிநொச்சி.ஜன.24

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் இன்று காலை மீண்டும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தலைமையிலான சமாதானத் தூதுக் குழுவினர், ஆழி அனர்த்த நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி குறித்தும் ஆராய்ந்தனர். விடுதலைப் புலிகளும் இதுபற்றி வலியுறுத்தியிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின், பிரதமரின் நடவடிக்கைகளை கண்காணிக்க ஊடக உளவுப்படை

கொழும்பு,ஜன.24

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென ஊடக அமைச்சின் உயரதிகாரிகளைக் கொண்ட உளவுப் படையொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உளவுப்படை அவ்வப்போது தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என ஊடகத்துறை அமைச்சர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளில் பிரதமருக்கும். ரணிலுக்கும் அரச மற்றும் தனியார் ஊடகங்களில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுவதையடுத்தே இந்த உளவுப் படை அவசரமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் குறித்தும், பாதிக்கப்பட்ட இடங்களில் பிரதமர் மேற்கொண்டுவரும் பணிகள் குறித்தும் அரச ஊடகங்களில் அளவுக்கு அதிகமாகப் பிரசாரம் செய்யப்படுவது ஜனாதிபதிக்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதும் இந்த உளவுப்படை அமைக்கப்பட்டதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர

(16ஆம் பக்கம் பார்க்க)

### சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான

## உணவு முத்திரைகள் வந்தன இந்த வாரம் விநியோகம்

யாழ்ப்பாணம்.ஜன.24

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண முத்திரைகள் இந்த வாரம் முதல் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் தனிநபர் ஒருவருக்கு வாரம் ஒன்றுக்கு 375 ரூபா பெறுமதியான நிவாரண முத்திரை வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரண முத்திரையின் மூலம் சம்

(16ஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்தப் பணி என்ற பெயரில் மீண்டும் ராணுவ ஆக்கிரமிப்புக்கு தயாராகிறது அரசு

### கூட்டமைப்பு எம்.பிக்கள் நோர்வே எம்.பிக்களுக்கு விளக்கம்

கொழும்பு.ஜன.24

ஆழிப்பேரலை அனர்த்தப்பணி என்ற பெயரில் இலங்கை அரசு மீண்டும் ஓர் இராணுவ ஆக்கிரமிப்புக்குத் தயாராகின்றது. அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலைப் பிரகடனமும், ஈரானில் மேற்கொள்ளப்படவுள்ள ஆயுதக்கொள்வனவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. - இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

நேற்று மாலை நோர்வே நாட்டு நாடாளுமன்ற) உறுப்பினர்களுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய சந்திப்பின்போதே அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர்.

நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித்தலைவர்களுமான ஜீலி கிரிடியன்ஸ் -

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச மருத்துவ அதிகாரிகள் நாளை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்

## ரஷ்யாவில் மருத்துவப் பட்டம் பெற்றோருக்கு நியமனம் வழங்குவதை எதிர்த்து

கொழும்பு,ஜன.24

ரஷ்யாவில் வைத்தியப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டவர்கள் இலங்கையில் வைத்தியர்களாக நியமிக்கப்படுவதை எதிர்த்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அரச வைத்திய அதிகாரிகள் நாளை செவ்வாய்க்கிழமை நாடு முழுவதும் அடையாள வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர். எனினும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வைத்தியர்கள் தொடர்ந்தும் பணியில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் போராட்டம் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் அனுருத்த பதனிய தெரிவித்ததாவது:-

ரஷ்யாவில் வெறும் ஆறு மாதம் மாத்திரமே வைத்தியப் படிப்பை மேற்கொண்டவர்களிடம் எமது மக்களின் உயிர்களை நம்பி ஒப்படைக்கலாமா? இது வைத்தியத் தொழிலுக்கே பெரும் சவால் இதனால் வைத்தியர்களை நம்பி ஒப்படைக்கப்படும் எமது மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாமற் போய்விடும்.

இலங்கை வைத்தியசபையில் உள்ள உயர் அதிகாரிகளே இவர்களுக்கு நியமனம் வழங்குகின்றனர். இவர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு வைத்தியத் தொழிலைப் பாதுகாக்க முன்வரவேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் இலங்கை வைத்திய சபையினரும் சட்டத்திற்கு முரணான வகையில் செயற்படுகின்றனர். இதற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் இலங்கை வைத்திய சபையைக் கேட்டுக்கொண்டபோதும் எமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்துடனும் இலங்கை வைத்திய சபையுடனும் நாம் இனியும் இணைந்து செயற்படப் போவதில்லை.

இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகவும் வைத்தியத்துறையில் இடம்பெறுகின்ற இவ்வாறான ஊழல்களை மக்கள் அறியவேண்டும் என்பதற்காகவுமே நாம் நாளை வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளோம். இருப்பினும் மனிதாபிமான அடிப்படையில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் வைத்தியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விரும்பினால் யாரையும் வைத்திய அதிகாரியாக நியமிக்கலாம் என்று சட்டத்தில் உள்ளது. இப்படியானதொரு நிலையில் எம்மால் இதைத் தவிர எதையும் செய்யமுடியாது.

இந்த விடயத்தில் அரசு நேரடியாகத் தலையிடவேண்டும். இது தொழிற் சங்க நடவடிக்கையல்ல இது வைத்தியத் தொழிலோடு சம்பந்தப்பட்ட ஆபத்தான விடயம்.

இந்த விடயத்தில் தன்னால் தலையிட முடியாது என சுகாதார அமைச்சர் நினைக்கலாம். ஆனால், அவர் இந்தப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கவேண்டும். அதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. - எனக் கூறினார்.

(க-10)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.24

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை நடத்தும் மாதாந்த முழுநிலா நிகழ்வில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் சீரிய கலாசாரத்திற்கு கல்வியின் பங்கு என்ற பொருளில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், கலையும் வாழ்வும் என்ற பொருளில் கலாபூசணம் சு.கணபதிப்பிள்ளையும் கருத்துரை வழங்குவர். ஓகன் வாத்திய இசை சிறப்புநிகழ்வாக இடம்பெறும். நன்றியுரையைப் பிரதேச கலாசார அலுவலர், செல்வி ரஜனி கந்தசாமி நிகழ்த்துவார்.

ஆர்வலர்களை இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றிப் பயன்பெறுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(எ)

## சுனாமி பாதித்த ஓய்வூதியர்களுக்கு சமூக பாதுகாப்புச்சபை உதவும்

கொக்குவில்,ஜன.24

இலங்கை சமூக சேவைப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்கள் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக ஊனமுற்றிருப்பின் அல்லது மரணமடைந்திருப்பின் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு இலங்கை சமூகசேவைப் பாதுகாப்புச் சபை முன்வந்துள்ளது.

இதுதொடர்பாக சபையின் பொதுமுகாமையாளர் பீ.சீ.நேசையா சுற்றறிக்கை ஒன்றை யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டோரில் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரதிபலன் உத்தேசத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்கள் ஊனமுற்றிருந்தால் அல்லது மரணமடைந்திருந்தால் அவர்களின் விவரங்களை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பிவைக்குமாறு அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-76)

## வீசேட பொலீஸ் குழு நியமிக்கப்பட்டபின்

# இரு மாதகாலப் பகுதிக்குள் பாதாள நபர்கள் 17 பேர் கொலை!

கொழும்பு,ஜன,24

பாதாள உலகத்தினரின் கொட்டத்தை அடக்குவதற்காக விசேட பொலீஸ் குழு அமைக்கப்பட்டதன் பின்னர் ஐந்து பாதாள உலகத் தலைவர்கள், அவர்களின் சகாக்கள் உட்படப் 17பேர் கடந்த சுமார் இருமாத காலப்பகுதியில் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பிரபல பாதாள உலகத் தலைவர்களான தம்மிக்க, தொப்பி சமிந்த, இந்திக றிஸ்வான், ஐயூப்கான் போன்றவர்களோடு அவர்களின் சகாக்களும் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நிட்டம்புவ பகுதியிலுள்ள தங்கல்லவத்தை என்ற இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட மூன்று முஸ்லிம் இளைஞர்களின் கொலைகளைக் கண்டித்து நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் கொம்பனித்தெரு பொலீஸ் நிலையம் முன்பாக கடந்த சனியன்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட இந்த மூவரும் ஏற்கனவே பொலீஸாரிடம் சரணடைந்தவர்கள் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கிவந்த பாதாள உலகக் கும்பல்களின் தலைவர்களும் அவர்களின் சகாக்களில் பலரும் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து பாதாள உலகத்தினரில் முக்கிய நபர்கள் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். ஏனையோர் கொழும்புக்கு வெளியே மறைவிடங்களில் ஒளிந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

பாதாள உலகத்தினரின் நடவடிக்கைகளை முடக்குவதற்காக விஷேட பொலீஸ் குழு அமைக்கப்பட்டதன் பின்னர் அது தமக்கு [illegible]யளித்துள்ளது எனப் பொலீஸ் தலைமை தெரிவித்துள்ளது.

## நிவாரணப் பணிகள் குறித்து புதனன்று செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.24

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமராட்சி சுனாமி அனர்த்தச் செயலணி பிரதிநிதிகள், சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-5)

## ஹெல்கிஸன் இன்று கல்முனைக்கு

காரைதீவு,ஜன.24

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இன்று திங்கட்கிழமை காலை சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிராந்தியத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

கல்முனையில் மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது காரைதீவு போன்ற பகுதிகளை அவர் பார்வையிடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடர் ஹெல்கிஸனுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், தூதரக அதி[illegible] உள்ளிட்ட உயரதிகாரிகளும் அங்கு [illegible]வுள்ளனர்.

கல்முனை வரும் விடர் ஹெ[illegible]ன் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை இருவேறு இடங்களில் சந்தித்துக் கலந்துரையா[illegible]வுள்ளார்.

சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெறும் எனக் கூறப்பட்டுள்ளது. தமிழ்த் தரப்பினரை கல்முனையில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த)

## சுன்னாகம் நகரில் வீதியோரம் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை

வலி.தெற்கு,ஜன.24

சுன்னாகம் நகரப் பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் குறிப்பிட்ட சில நாள்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.


வீதிப் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன் வெள்ளி ஆகிய தினங்களில் வீதியின் வலப் பக்கத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் வீதியின் இடது பக்கத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை பொலீஸாரின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதனை மீறிச்செயற்படுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டப்பணம் அறவிடப்படும் என பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், போக்குவரத்துக்கு இடையூறு தரும் வகையில் வியாபார நிலையங்களின் முன்பாக உள்ள வீதியோரங்களில் பொருள்களை வைத்து விற்பனை செய்வதும், விற்பனை நிலையங்களுக்கு முன்பாக தாழ்வாரங்களை அமைத்துச் செயற்படுவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(10-152)



இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வல்வை சிதம்பரக் கல்லூரி நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கனடா, லண்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த கந்தசாமி இராசபூபதி, இரத்தினசிங்கம் குகேந்திரன் ஆகியோர் அனுப்பிவைத்த நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களை கெருடாவில் சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.குணசேகரம் மாணவி ஒருவருக்குக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம் :குடத்தனைச் செய்தியாளர்)*

# மணற்காட்டு மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்கள்

## யாழ்.செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.24

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் மணற்காட்டைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக இருப்பிட வசதிகளை அமைத்துக் கொடுக்க யாழ்.செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தப் பாதிப்புக்களால் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் 79 குடும்பங்களும், வரணி மத்திய மகாவித்தியாலயத்தில் 45 குடும்பங்களும், குடத்தனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் 78 குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இக்குடும்பங்களை மீளக் குடியமர்த்தும் நோக்குடன் யாழ்.செயலகத்தில் இயங்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிதி உதவியுடன் மணற்காட்டுப் பகுதியில் இந்த தற்காலிக இருப்பிட வசதிகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இந்தத் தற்காலிக இருப்பிடங்கள் அமைக்கும் பணி நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

(த-5)

## சுனாமியால் அ.அட்டை இழந்தோருக்கு அடுத்தமாதம் 5 முதல் விநியோகம்

கொழும்பு,ஜன.24

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக அடையாள அட்டைகளை இழந்தோருக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பணம் அறவிடப்படாமல் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையை இழந்தோர் தொடர்பான தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன. சுமார் ஒரு லட்சம் பேர் அடையாள அட்டைகளை இழந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று அதிகாரிகள் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கவுள்ளனர். இதன் முதற்கட்டமாக அடுத்த மாதம் 5ஆம் திகதி தென்மாகாணத்தில் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒருமாத காலத்துக்குள் இந்த நடவடிக்கையைப் பூர்த்திசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஏனைய அமைச்சர்களின் ஆதரவும் பெறப்படும். போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து அடையாள அட்டை பெற முயற்சிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(க-10)

# பொதுத்தேர்தலை முன்னிட்டு ஈராக்கில் கூடுதல் பாதுகாப்பு

பக்தாத்,ஜன.24

ஈராக்கில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை முன்னிட்டு அன்றையதினம் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஈராக்கின் உள்துறை அமைச்சர் பாலா அல்நகிப் தெரிவித்தார்.

ஈராக்கில் பொதுத்தேர்தல் இம்மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு தொடர்ந்து பல வன்முறைச் சம்பவங்களும், கார்க்குண்டுத் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன. இதனையடுத்தே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பக்தாத் விமான நிலையம் தேர்தலை முன்னிட்டு இரண்டு நாள்களுக்கு மூடப்பட்டிருக்கும். அத்தோடு இரவு நேரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும். இரவில் மக்கள் மற்றும் வாகன நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்படும்.

தேர்தல் சமயத்தில் ஈராக்கிற்கான தரைப் பாதைகள் எல்லையில் மூடப்பட்டிருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஷியா முஸ்லிம்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இரண்டு கார்க்குண்டுத்தாக்குதல்களில் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதனையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகளில் தீவிரகவனம் செலுத்தப்படுகின்றது.

தற்போது புதிதாக அமுல்படுத்தவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமைதியான முறையில் தேர்தல் நடக்க வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன் என அவர் கூறினார்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து ஐ.நா. தேர்தல் அதிகாரி கார்லோஸ் வெலன் சுவேலா கூறியதாவது

ஈராக்கில் தேர்தல் [illegible]தில் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகா[illegible]ாடுகள் பயனளிக்குமாயின் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற வாய்ப்புள்ளது. [illegible]நுடன், ஒழுங்கான முறையில் நடத்தப்பட்ட தேர்தல் என்று அங்கீகாரம் வழங்கவும் வாய்ப்புள்ளது என்று கூறினார்.

மொசாம்பிச் மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளில் மோதல்களுக்குப் பிறகான தேர்தலைக் கண்காணித்த அனுபவம் கொண்ட இவர் தேர்தல் நாளன்று தாக்குதல் நடத்த கிளர்ச்சியாளர்கள் முயல்வார்கள். வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தால் தேர்தல் செல்லுபடியாகாது என்று கூறமுடியாது. ஆனால், வாக்குச் சாவடிகளில் பெருமளவில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தால் இந்நிலைமை மாறலாம் என்று அவர் கூறினார்.

இதேவேளை, அண்மையில் ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 8 சீனக் கட்டடத்தொழிலாளர்கள் ஈராக்கில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கிற்கு சீனப்பிரஜைகள் வரக்கூடாது என்ற தீவிரவாதிகளின் கோரிக்கையை சீன அரசு ஏற்றுக்கொண்டதனால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட பணயக்கைதிகள் ஈராக்கின் முன்னணி சுனி மதக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர் என கடத்தியவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கார்க்குண்டு வெடிப்பில் 12 பேர் பலி; 25 பேர் படுகாயம்!

பக்தாத்,ஜன.24

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஷியா முஸ்லிம் பிரிவினரின் திருமண விருந்தொன்றில் இடம்பெற்ற தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் படுகாயமடைந்தனர்.

தெற்குப் பக்தாத்தில் யுசிபியா கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக தீவிரவாத இயக்கத்தினர் செய்திருக்கலாம் என உள்நாட்டுப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டுகளால் நிறைக்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தை விருந்து நடந்த வீட்டின் சுவரில் மோதி தீவிரவாதிகள் வெடிக்க வைத்தனர் என்று கூறப்பட்டது.

இவ்வாறு ஈராக்கில் நடந்துவரும் கார்க்குண்டுத் தாக்குதல்களால் மக்கள் பெரும் பீதியில் இருக்கின்றனர். இம்மாதம் 30 ஆம் திகதி நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலை சீர்குலைக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (த-க)

## ஒஸாமாவின் சிந்தனை அடங்கிய புத்தகம் அமெரிக்காவில் வெளிவரும்

நியூயோர்க்,ஜன:24

ஒஸாமா பின்லேடன் மற்றும் அல் - கெய்டா தலைவர்களின் சிந்தனைகளைப் பற்றிய புத்தகம் விரைவில் அமெரிக்காவில் வெளியாகவுள்ளது.

இதுபற்றி டபுள்டே பதிப்பகத்தின் தகவல் தொடர்பாளர் சுஜன்னி ஹெராஜ் கூறியதாவது-

இந்தப் புத்தகத்தில் அல் - கெய்டா இயக்கத்தின் போராட்ட வரலாறு, ஒஸாமாவின் பேட்டி மற்றும் அவரது வலதுகரமான அல் - ஜவாகிரியின் கருத்துகள் உட்படப் பல பகுதிகள் இடம்பெறும். இதன்மூலம் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கித் தவித்தவர்களை நாங்கள் காயப்படுத்த விரும்பவில்லை. ஆனால், அமெரிக்கர்கள் தங்கள் எதிரிகளின் உண்மையான பலம் என்ன என்பதை தெரிந்துகொண்டு போராட இது உதவியாக இருக்கும். இந்தப் புத்தகத்தின் மூலம் கிடைக்கும் லாபம் முழுவதும் நன்கொடையாக வழங்கப்படும்

இவ்வாறு சுஜன்னி ஹெர்ஜ் கூறினார். (த-க)

## ஆழிப் பேரலைத் தாக்கம் காரணமாக அமெ.கிணறுகளில் நீர்மட்டம் அதிகரிப்பு

புளோரிடா,ஜன.24

ஆழிப் பேரலைத் தாக்கத்தின் பிரதிபலிப்பாக அமெரிக்காவிலுள்ள ஆழமான கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக அமெரிக்க நீர்வளத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் ஆசிய நாடுகளான இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

ஆழிப்பேரலையின் தாக்கமே அமெரிக்காவிலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயரக் காரணமாகும் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் நான்கு அங்குலம் அளவுக்கு உயர்ந்துள்ளதாக நீர் நிர்வாகத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆசியாவிலிருந்து சுமார் 12 ஆயிரத்து 800 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் அமெரிக்காவிற்கு சுமத்திரா தீவுக்கு அருகில் ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் சுனாமிப் பேரலை என்பன தாக்கத்தை ஏற்படுத்தியமை குறித்து அவர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். (த-க)




## ஆழிப் பேரலை தாக்கி 25 நாள்களின் பின்னர் நிக்கோபார் தீவில் ஒருவர் உயிருடன் மீட்பு!

அந்தமான்,ஜன.24

ஆழிப்பேரலைத் தாக்கம் ஏற்பட்டு 25 நாள்களுக்குப் பின்னர் அந்தமான் நிக்கோபார் தீவிலிருந்து ஒருவரை இந்தியக் கடற்படையினர் உயிருடன் மீட்டுள்ளனர்

மைக்கல் மஸ்கல் எனப்படும் இந்நபர் சுனாமி அலைகளால் தூக்கியெறியப்பட்டதில் தீவின் காட்டுப் பிரதேசத்திற்குள் சென்று சேர்ந்துள்ளார். அங்கு கிடைத்த தேங்காய்களைச் சாப்பிட்டு இத்தனை நாள்கள்வரை உயிர் வாழ்ந்தார் என அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலையினால் அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.மேலும் 5 ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த பிலாபன்ஜா எனப்படும் தீவிலிருந்தே மேற்படி நபரை தாம் மீட்டனர் என இந்தியக் கடற்படையினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சரியான உணவு இல்லாததன் காரணமாக பலவீனத்துடன் இருந்த அவருக்கு சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டிருந்தன. அவர் தனது ஆடையை அசைத்து சைகை தெரிவித்ததனாலேயே அவரை எம்மால் மீட்க முடிந்தது - என்றனர்

தான் உயிருடன் மீட்கப்பட்டது குறித்து மைக்கல் மஸ்கல் தெரிவிக்கையில், அலைகளால் தூக்கியெறியப்பட்ட நான் மரமொன்றின் மீது ஏறி அமர்ந்திருந்தேன் பல இரவுகள் பயத்துடன் கண்விழித்திருந்தேன். நான் உயிர் பிழைத்ததே தெய்வாதீனமான செயலாகும்- என்று தெரிவித்தார். (த-க)

## 2005 ஜனவரி 11 ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை பணமாக உதவி செய்தவர்கள்

| பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|
| 1.மனோகரன் சிவபூரணம் | எழுதுமட்டுவாழ் தெற்கு. | 8,500 |
| 2.கனகசபாபதி பாலசிங்கம் | சித்திரமேழி, இளவாலை. | 10,000 |
| 3.திரு.சுவாமிநாதன் | சுழிபுரம் வடக்கு | 500 |
| 4.திரு.உவில்லியம்ஸ் | சந்நிதிறோட், அச்சுவேலி | 10,000 |
| 5.பெயர் போடவிரும்பாத அன்பர் | அச்சுவேலி | 500 |
| 6.திரு.திருமதி சடிஸ்றோய் | பிரான்ஸ் | 10,000 |
| 7.பெயர் போட விரும்பாத அன்பர் | மூளாய்றோட், வட்டுக்கோட்டை | 500 |
| 8.இருபாலை வாழ் மக்கள் | இருபாலை | 1,000 |
| 9.ப.பத்மநாதன் | ஊரெழு கிழக்கு, சுன்னாகம் | 5,000 |
| 10.வெ.ஏகாம்பரநாதன் | உடுவில், சுன்னாகம் | 500 |
| 11.முருகானந்த சனசமூக நிலையம் | நவாலி | 5,000 |
| 12.கோல்டன்சுகிள் பாதுகாப்புச்சேவை | 43, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் | 25,000 |
| 13.வீநாசித்தம்பி கனகநாயகம் | இணுவில் மேற்கு | 1,001 |
| 14.கந்தையா மகேஸ்வரன் | (ஜேர்மனி), கோப்பாய் வடக்கு | 10,000 |
| 15.ஜெ.ஜெயவேணி | 150, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு | 4,000 |
| 16.Frelm Kis,Rea Berind Thense | சுவிஸ் | 8,100 |
| 17.செல்வராஜா லக்ஷன் | சுவிஸ் | 8,100 |
| 18.ப.அமுர்தசாகரன் | 155, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் | 5,000 |
| 19.எஸ்.பிரதீபன் | ஆஸ்திரேலியா | 7,000 |
| 20.என்.சந்திரகுமார் | கனடா | 5,000 |
| 21.எம்.சிற்றம்பலம் | உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் வடபகுதி | 1,000 |
| 22.எம்.இராசையா | உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் வடபகுதி | 1,000 |
| 23.எஸ்.சுப்பிரமணியம் | ” ” ” | 1,000 |
| 24.கே.செவ்வரட்ணம் | ” ” ” | 500 |
| 25.வி.பரமலிங்கம் | ” ” ” | 1,500 |
| 26.ஆர்.ரட்ணராஜா | ” ” ” | 1,000 |
| 27.எஸ்.நிர்மலேந்திரன் | ” ” ” | 2,000 |
| 28.வி.மகேந்திரன் | ” ” ” | 10,000 |
| 29.எ.வேல்முருகு | ” ” ” | 1,000 |
| 30.எம்.சிவஞானசுந்தரம் | ” ” ” | 1,000 |
| 31.கே.எ.இளையதம்பி | ” ” ” | 500 |
| 32.எஸ்.தயானந்தன் | ” ” ” | 300 |
| 33.என்.சரவணமுத்து | ” ” ” | 3,000 |
| 34.வி.கே.நிங்கமயில் | ” ” ” | 5310.40 |
| 35.என்.கேதீஸ்வரன் | ” ” ” | 1,000 |
| 36.எஸ்.வி.சின்னத்துரை | ” ” ” | 1,000 |
| 37.வி.இரட்ணம் | ” ” ” | 1,000 |
| 38.கே.நாகேஸ்வரன் | ” ” ” | 1,000 |
| 39.வி.நகுலேஸ் | ” ” ” | 1,000 |
| முன்வரவு | | 7,77,851 |
| | | 9,53,662 .40 |

## 2005 ஜனவரி 11 ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை பொருளாக உதவி செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1.சிவஸ்ரீ இ.சிறிதர்குருக்கள் | கண்டிவீதி, கொடிகாமம். | உடுப்பு வகை |
| 2.எஸ்.ரேணுகா தேவன் | 30/22 அத்தியடி குறுக்குவீதி, யாழ்ப்பாணம். } | 40,000 பெறுமதியான உணவுப்பொருள்கள் |
| 3.வி.சண்முகரிகா | 30/22 அத்தியடி குறுக்குவீதி, யாழ்ப்பாணம். } | |
| 4.ஆ.அலன் | நாயன்மார்கட்டு, யாழ். | உடுப்பு வகை |
| 5.திரு.அம்பலவாணர் | கனடா. | உணவுப் பொருள் |
| 6.வே.சிவகுருநாதர் | 377, கஸ்தூரியார் வீதி, யாழ். | உணவுப் பொருள், உடுப்பு வகை |
| 7.சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் (தலைமைச் செயலகம்) | ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். | 55,000 ரூபா பெறுமதியான பொருள்கள் |
| 8.மாவட்ட ஆணையாளர் | சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்ப்பாணம். | பிஸ்கட் வகை, நூடில்ஸ் |
| 9.இளையதம்பி சிவஞானம் | ஆவரங்கால் மேற்கு. | பால்மா, உடுப்பு வகை |
| 10.Dr.க.கனேஸ்வரராசா | கோணாவளை லேன், திரு.நெல்வேலி. | பால்மா, பிஸ்கட் |
| 11.சி.ரட்ணசபாபதி | கன்னாதிட்டிலேன், யாழ்ப்பாணம். | உணவுப் பொருள்கள், உடுப்புகள் |

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

முசந்தாஸ் (சிவப்பு, வெள்ளை, பிங்), சைப் பிரஸ், குறோட்டன், றெசினா, யம்பு, பாரியாதம், பாம்ஸ் ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (41023)

கோழி எரு விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ் பாம், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 2867, 222 3529. (41204)

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சதாசிவம் ஐங்கரன் என்பவரது தேசிய அ.அட்டை (822622321V), வங்கிப் புத்தகம் என்பன 15-01-2005இல் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 077 6656030. (41178)

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, பொன்னப்பா ஒழுங்கையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 32, பிரப்பங்குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (41179)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை. (தங்கி நின்று வேலையாற்றுபவர் விரும்பத்தக்கது). தொடர்பு: R.விஸ்வலிங்கம், இல.235, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41183)

## சோதிடம்

கல்வி, தொழில், விவாகம், புத்திரர், நோய் என்பன பற்றிய உங்கள் வினாக்களுக்கு உடனே விடை அளிக்கப்படும் ஜாதகம் கைரேகை, எண் விஞ்ஞானம் ஆகியவை மூலமாகப் பலன சொல்லப்படும். டாக்டர் த.சிவானந்தன், பிரபல சோதிடர் 264, பலாலி வீதி, கந்தர்மடம்.(41031)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

தனிப்பட்ட பாவனையில் உள்ள CD 100 (Delux) மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு. (உரிமையாளர் வெளிநாடு செல்வதால்) தொடர்பு: செ.ஞானேஸ்வரி, 55A, பழம் வீதி, கந்தர்மடம். T.P.: 077 6647985. (41166)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 26-01-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 2867, 222 3529, P.ரவி, துபாற்கநதோர்வத், சாவகச்சேரி. தரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சீத், 517, எஸ்ரான்லி றோட் ஸ்ரீராம், பருத்தித்துறை, பஸ்நிலையம் முன்பாக. (41205)

## மேல்மாடி வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, வின்சர் சந்திக்கும் பாட்டாச் சந்திக்கும் இடையில் வீதிப் பக்கமாகவுள்ள மேல்மாடி வாடகைக்குண்டு. வேறு பிரத்தியேகப் பாதையும் உண்டு. தொடர்பு: No: 121 (75), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776 055157. (41206)

## திருமண சேவை

1973ஆம் ஆண்டு பிறந்த, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த, அழகான, பொருத்தமான மணமகள் தேவை. அத்துடன், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல.286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (41207)

## புதிய இசை வகுப்புகள்

மேலைத்தேய, கீழைத்தேய
இசை வகுப்புகள் நாளை (25-01-2005)
செவ்வாய்க்கிழமை தைப்பூசத்தன்று
ஆரம்பமாகின்றன.
நேரம்: மாலை 3.30 - 7.30 வரை (பு.நே.)
தொடர்பு: **வாசுகி ரங்கன், நியூவீணா கானம்,**
16/2, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 7729. (41170)

## உரும்பிராயில் வீதியின் அவலநிலை

உரும்பிராய் மூன்று பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லும் வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியால் செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வீதிப் புனரமைப்புக்கென கற்களும் தாரும் வீதியோரம் பறிக்கப்பட்டிருந்தும் வீதித் திருத்தப் பணி தொடங்கப்படவில்லை. அதிகாரிகள் கவனம் எடுத்து முன்வந்து இவ்வீதியைத் திருத்திய மைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.(ஐ-203-178)

## அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை
### சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

25.01.2005 செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்குப் புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. சேர விரும்புவோர் இத்தினத்தில் சமுகமளித்து அன்று நடைபெறும் நாள் வகுப்பில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:
மற்றைய வகுப்புகளுக்கான நேர அட்டவணையினை அன்றையதினம் பெற்றுக்கொள்ளலாம்.

முத்துமாரி அம்மன் கோயிலடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (41193)(39-14-26) - அதிபர்

உ
முருகன் துணை



## இணுவில் கந்தசுவாமி கோயில்
## தைப்பூசம் - மஞ்சத்திருவிழா

மேற்படி விழா தாரண வருடம்
தைத்திங்கள் 12ஆம் நாள் (2005-01-25)
செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

சங்காபிஷேகம்: (1008) முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.
விசேடபூசை: நண்பகல் 12.00 மணி
மஞ்சம்: மாலை 6.00 மணிக்கு சண்முகப்பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதரராக திருமஞ்சத்தில் வீதிவலம் வருவார்கள்.

*அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு*
*சண்முகப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு*
*அன்புடன் வேண்டுகின்றோம்.*

இணுவில். - உபயகாரர்கள்
(41163)(26-14) தைப்பூசத் திருவிழா.

# பூப்புப்புனித நன்நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தைமாதம் 12 ஆம் நாள்
(25-01-2005) தைப்பூசம் செவ்வாய்க்கிழமை காலை 9.30
மணிமுதல் 12.35 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி

**கலீசியா**

அவர்களுக்கு

பூப்புப்புனித நன் நீராட்டு விழா நடத்தப்பெரியோர்களால்
நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு :- இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"திருவதிகை",
சுதுமலை தெற்கு. மானிப்பாய்.
T.P.:-222 - 6451

தங்கள் நல்வரவை நாடும்:
S.வரதன் - கட்டட ஒப்பந்தகாரர்
சுசீலாதேவி தம்பதியினர்.

# கல்விக் கோட்டங்களை அமைப்பதற்கு நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.24

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இரு கல்விக்கோட்ட அலுவலகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

55 பாடசாலைகளைக் கொண்ட தென்மராட்சி வலயத்தில் தற்போது சாவகச்சேரிக் கல்விக்கோட்டம் மட்டுமே இயங்கிவருகின்றது. எனவே, சாவகச்சேரி, கொடிகாமம் என இரு கல்விக்கோட்டங்களை அமைத்துச் செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொடிகாமம் உதவிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளைக் கொடிகாமம் கல்விக்கோட்டத்தில் இணைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(8-203-117)

## கதைப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

மாணவ, மாணவிகளுக்கேற்ற -
நீதி, நியாயங்களை எடுத்துக்காட்டும்



இதிகாசமான
"மகாபாரதம்" (1-32) CDக்களில்
வெளிவந்துள்ளன!
இன்றே விரையுங்கள்!
கையிருப்பு சொற்பமே!

**ஆராதனா ஆடியோ, வீடியோ விஷன்**
இல.5, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
☎ 0777 354450 (41160)(26-14)

## லிங்கம் பென்சி ஹவுஸ்

- பென்சி பொருள்கள்
- வாசனைப் பொருள்கள்
- சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும

ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**129, ஜும்மா மஸ்ஜித் லேன்**
(பெற்றோல் நிலைய அருகில்)
(26-14) **யாழ்ப்பாணம்.** (41029)

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 01 01 1929



மறைவு 17 01 2003

அமரர்
**வேலுப்பிள்ளை முத்துக்குமாரு**

(திதி - சதுர்த்தசி)
அன்பின் இருப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
சமூகத்தின் ஒளி விளக்காய்
பண்பின் சிகரமாய்
பல்லோரும் வாழ்ந்தீரே

உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
பழைய வீதி ,கோப்பாய் தெற்கு
கோப்பாய்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தர் காசிநாதர்

(இளைப்பாறிய ஆசிரியரும்,
மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய தர்மகர்த்தா)



மட்டுவில் வடக்கு, ஆயத்தடியைச் சேர்ந்த கந்தர் காசிநாதர் (இளைப்பாறிய ஆசிரியர்) 2005-01-22 சனிக்கிழமை மாலை சிவபதமடைநது விட்டார்.

அன்னார் அமரர் ஆ.க.வல்லிபுரம் (உடையார் லேன், பழம்றோட், கந்தர்மடம்) அவர்களின் சகோதரரும் திருமதி கா.சிவகாமிப்பிள்ளை அவர்களின் கணவரும் பாலசுப்பிரமணியம் (T.R.O., கிளிநொச்சி), சரோசினிதேவி, அமரர் ஈஸ்வரிதேவி (அச்சுவேலி), சிவபாலன் (தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்), சிவகடாட்சம் (கடாபி - சுகந்தி லொறி உரிமையாளர்), சிவஞானசுந்தரம் (திருக்கணித அச்சகம், சாவகச்சேரி), கிருபாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஸ்பகாந்தி, தவரததினம், மனோன்மணி, விமலினி, அமரர் சண்முகானந்தம ஆகியோரின் மாமனாரும் அரவிந்தன், அனுஷா, அமுதா, அஜந்தன், திருமதி உமா சத்தியேந்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை, தாதிய உத்தியோகத்தர்), திருமதி சுகிதா - சர்வநாதன் (சுவிஸ்), சுதன், சுரேகா, அபிராமி, ஆரணி, தாரணி, மயூரன், பிரசன்னா, பிரவீணா (ஆங்கிலக் கல்லூரி, ஜெயந்திநகர், கிளிநொச்சி), பிரதீபா, பிரபூர்ணா, பிரணவி, குமணன் (பிரான்ஸ்), ஸ்ரீரமணன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-01-2005) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் முத்துமாரி அம்மன் கோயில் வீதி, சிவன் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பால மயானத்திற்குப் பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு சிவக்கிரியைகளைத் தொடர்ந்து தகனக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மட்டுவில் வடக்கு,
சாவக்கச்சேரி.
தகவல்:
(41202)(26-14) கா.சிவபாலன் *(மகன்)*.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# உஷாரடைகிறது சர்வதேச சமூகம்

தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் அந்தத்தில் நின்றுகொண்டு, விரைவில் அரசியல் அந்தகாரத்தை எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டில் திக்கித் தவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு, நீரில் மூழ்கித் தத்தளிப்பவனுக்கு சிறுதுரும்பு கிடைப்பதுபோல, ஆழிப்பேரலை அனர்த்தம் வசதியாக வந்து வாய்த்திருக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் என்ற இந்தச் சிறுதுரும்பை வைத்துக் கொண்டாவது அதிகாரப்பதவி நீடிப்பு என்ற கரையை ஏறிவிடமுடியாதா என்ற நப்பாசை அவருக்கு. அதற்காகப் பகீரதப் பிரயத்தன முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் அவர்.

தேசிய அனர்த்தத்தைக் காட்டி, அவசரகால விதிகளை நடைமுறைப்படுத்துகின்றார். அவலத்தின் ஆழத்தைப் புரிந்துகொண்டு சர்வதேச சமூகம் வாரிவழங்கும் உதவிகளை மூலதனமாக வைத்துத் தமது சொந்த அரசியல் லாபங்களுக்காகக் காய்நகர்த்தல்களைச் செய்ய முனைகின்றார்.

சர்வதேச ரீதியில் கிடைக்கும் மீட்பு, நிவாரண, மீள்கட்டுமான உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை அரசுக் கட்டமைப்பு என்ற பெயரில் தமது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எத்தனிக்கின்றார். அந்த நிதியைக் கையாளும் அதிகார மையங்களுக்குத் தனது நம்பிக்கைக்குரிய ஆள்களையும் தனது கட்சிக்காரர்களையும் பொறுப்பாக நியமிக்கின்றார். நாட்டின் சகல செயலாக்கங்களையும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பெயரால் தனது கைக்குள் கொண்டுவர எத்தனிக்கின்றார்.

போதாக்குறைக்கு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்தல் எதுவும் இல்லையென்றும் பிரகடனப்படுத்துகின்றார்.

இவ்வளவையும் செய்து, தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தைத் தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, அதிகாரத்தில் தன்னைத் தக்க வைக்கும் அடுத்தகட்ட நகர்வுக்கு அவர் தயாராகின்றார்.

அதை இலகுவாக முன்னெடுப்பதற்கு வசதியாக, அச்சமயத்தில் இனப்பிரச்சினை விவகாரத்தையும் - வடக்கு, கிழக்குப் பிரதேச விடயத்தையும் - சுமூகமாகப் பேணவும், பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் அவர் விரும்புகின்றார்.

மீள்கட்டுமானத்திற்காகத் தேசிய மட்டத்தில் தாம் அமைக்கும் உயர்சபையில் பத்தோடு பதினோராவது தரப்பாக விடுதலைப் புலிகளையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் அந்தப் பக்கத்துச் சிக்கலைத் தவிர்க்கலாம் என எடைபோடுகிறார் அவர்.

ஜனாதிபதி சந்திரிகா விரிக்கும் வலையில் - தனது சொந்த அரசியல் லாபத்துக்காக அவர் போடும் திட்டத்தில் - அவர் வைக்கும் பொறியில் - சிக்குவதற்குப் புலிகள் என்ன அவ்வளவிற்கு விடயம் புரியாதவர்களா?

அதனால்தான் உயர்சபை பற்றிய அவரது அழைப்பை உதாசீனஞ்செய்துவிட்டு, மீள்கட்டுமானத்திற்கான சர்வதேச உதவிகளைப் பயன்படுத்துவதற்குத் தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் மூவினப் பிரதிநிதிகளையும் கொண்ட செயலணி ஒன்றை அமைப்பது குறித்துப் புலிகள் வற்புறுத்துகின்றார்கள்.

சர்வதேச சமூகம் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காக வாரிவழங்கும் நிதியை, அரசு கட்டமைப்புகளுக்கு ஊடாக உரிய திட்டங்களுக்குச் செலவிடுவது என்ற போர்வையில் தனது சொந்த அரசியல் லாபங்களை எட்டுவதற்கு ஜனாதிபதி குமாரதுங்க எத்தனிக்கின்றார் என்பதைச் சர்வதேச சமூகம் நன்கு புரிந்துகொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதனாலேயே இந்த உதவிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும்படி இலங்கை உட்பட உதவிபெறும் நாடுகளைச் சர்வதேச சமூகம் வலியுறுத்தத் தொடங்கியிருக்கின்றது.

அனர்த்த நிவாரண உதவிகளை வழங்குவது குறித்து நேரில் ஆராய்வதற்காக இலங்கை வந்த நோர்வேயின் இரு அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவும் இதையே வற்புறுத்தியிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அந்த மக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தவர்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் என சம்பந்தப்பட்ட பிரதேசத் தரப்புகள் அதிகம் பங்குபற்றக்கூடியதான கட்டமைப்புகள் மூலமே உதவி நிதிகள் வழங்கப்படவும் - கையாளப்படவும் - செலவிடப்படவும் - வேண்டுமென நோர்வேத் தரப்பு வற்புறுத்தியதும் இந்தப் பின்னணியில் தான்.

அதுமட்டுமல்ல, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்கும்போது அந்த நாடுகளிலுள்ள பிணக்கு விவகாரம் குறித்து கவனத்தில் எடுத்து (Conflict Senstive) செயற்படும்படியும் உதவி வழங்கும் ஏனைய சர்வதேச சமூகத் தரப்புகளை நோர்வே கோரியிருப்பதாவும் தெரிகின்றது.

இலங்கை போன்ற நாடுகளில் உள்ள அரசுகளும் அரசுத் தலைவர்களும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காகக் கிடைக்கும் நிதியைத் தமது சொந்த அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்தவும் பயனாளிகளுக்கு அந்த உதவிகள் கிட்டும் விடயத்தில் பாகுபாடு செய்து அதனைச் செலவிடவும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உதவி வழங்கும் நாடுகள் போதிய முன்னெச்சரிக்கை விதிப்புகளை ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

இலங்கை விவகாரத்தில் இது முக்கியமானது என்பது சர்வதேச சமூகத்துக்கு இப்போது நன்கு புரியத் தொடங்கியிருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

உதவிகள் வழங்கும் விடயத்திலும் அவை பயனாளிகளுக்கு உரிய வகையில் எட்டும் விவகாரத்திலும் நீதி பேணப்படுவதை உறுதிப்படுத்த இந்தப் புரிதல்நிலை கை கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

# சகலவசதிகளும் கொண்ட கலாசார மண்டபத்தை மாநகரசபை அமைக்கும்

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தகவல்

யாழ்ப்பாணம்.ஜன.24

திறந்தவெளி அரங்கு இருக்கும் இடத்தில் சகல வசதிகளும் கொண்ட கலாசார மண்டபம் ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை கட்டியெழுப்பவிருப்பதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது களநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது. மாநகரசபையின் இத்திட்டத்துக்குக் கலாசார அமைச்சு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இணையம் வெளியிட்டுள்ள கள அறிக்கையில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தவறுவிடும் வாகன ஓட்டிகளை முறையாகத் தண்டனைக்குட்படுத்தாது விடும் பொலீஸாரின் நடவடிக்கைகள் வீதி விபத்துக்கு முக்கிய காரணிகளாய் இருக்கின்றன.

பண்ணைவீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கவனிப்பற்றுக் கிடப்பதனால் தீவுப்பகுதிகளை இணைக்கும் இப்பாதையில் அல்லைப்பிட்டிக்கும் மண்டைதீவுக்குமிடையிலான பகுதி கடலில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பினாலும், கடல்நீர் உட்புகுவதனாலும் மக்களின் குடிநீர் உவர் நீராக மாறும் ஆபத்து ஏற்பட்டுவருகின்றது.

நெடுந்தீவுக்கான கடல் தொடர் வள்ள சேவை போதுமானதாக இல்லை. இத்தீவுக்கான பிரயாண வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டம் மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிப்புக்குளாகியுள்ளது. வயல்களில் வெள்ளநீர் பெருகி நிற்கின்றது. இதனால் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களங்களுக்கும் செயலகத்துக்கும் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் குறைவான நிதி ஆதாரங்களே வழங்கப்பட்டிருப்பதாகச் சிறிலங்கா மனித உரிமைகள் ஆணையாளர் டாக்டர் என்.செல்வக்குமாரன் தெரிவித்துள்ளார். இது பெரும் மனித உரிமை மீறலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுவிடயம் தங்களுக்கு முறைப்பாடாகத் தெரிவிக்கப்பட்டால் தாம் பொருத்தமான நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-5)

# கோதுமைமாவுக்கு விலை நிர்ணயம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயித்துள்ளனர்.

இதன்படி ஒரு கிலோ கோதுமைமா 30 ரூபாவாக விற்பனை செய்யப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமை முதல் இந்த விலை நிர்ணயம் நடைமுறைக்கு வருகின்றது.

மக்களின் நலன் கருதிக் கோதுமை மாவுக்கு இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் -

இவ்விலையை விடக் கூடுதலான விலையில் மாவினை விற்க வேண்டாமெனவும் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் அறிவித்திருக்கின்றனர். (கு-204)

# நலன்புரி நிலையங்களில் நுளம்புகள் பெருக்கம்

வளலாய்.ஜன.24

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்களில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால், இந்த நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதிப் பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கக் கூடிய வழிமுறைகளை உரியவர்கள் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-203-178)

# 39 அடி உயர சித்திரத்தேருக்கு சிதம்பரத்தில் நாளை கால்கோள்

காரைநகர்.ஜன.24

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான கால்கோள் விழா நாளை செவ்வாய் கிழமை காலை 9.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் ஐயனார், சிவன் ஆகிய மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று தொடர்ந்து புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான கால்கோள் விழா நடைபெறும்.

இவ்விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தத்துவக்கலாநிதி சிவஸ்ரீ பண்டிதர் க.வைத்தீசுவரக்குருக்கள், ஈழத்துச்சிதம்பர பிரதம சிவாச்சாரியார் வி.ஈஸ்வரக்குருக்கள் ஆகியோரும்-

வாழ்த்துரைகளை முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரன், ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்களான ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம் ஆகியோரும் சிறப்புரைகளை காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், காரைநகர் மணிவாசகர் சபைத்தலைவரும் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிக்கான பண்பாட்டலுவலர் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவற்றின் வழிகாட்டலில் ஜெனா சிற்பக்கலைக் கூட சிற்பக்கலைஞர் ஜெயகாந்தன் சிற்பாசாரியார் தலைமையில் நடைபெற உள்ள புதிய சித்திரத் தேர் அமைக்கும் பணியில் ஈடுபடுவதற்காகத் தமிழகத்தில் இருந்து இருபது சிற்பக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-73)

# சட்டவிரோத மின் இணைப்பு; காரைநகரின் சில பகுதிகளில்

காரைநகர்.ஜன.24

காரைநகரின் சில பகுதிகளில் பெரும் எண்ணிக்கையானோர் சட்ட விரோதமான முறையில் மின் இணைப்பைப் பெற்றுள்ளனர். இதனால் உயிரிழப்புக்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மின் இணைப்பு வழங்கப்படாத இடத்திற்கு சுமார் 500மீற்றர் தூரத்திலுள்ள மின் கம்பத்தில் இருந்து பாதுகாப்பற்ற வயர்கள் மூலம் சட்டவிரோத மின் இணைப்பு பெறப்பட்டு பல வீடுகளுக்கு மின் இணைப்பு பொருத்தப்பட்டுள்ளது என்றும்-

வீதிகளுக்கும் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன எனவும்-கூறப்படுகிறது.

இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் பல குடும்பங்கள் மின் இணைப்புப் பெற்றிருப்பதனை உரிய அதிகாரிகளும் மின்சாரசபையினரும் கண்டும் காணாது இருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, காரைநகரில் உள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் இது வரை வழங்கப்படவில்லை. இக்கிராம மக்கள் பல வருடங்களாக மின்சாரசபையிடம் கோரிக்கை விடுத்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர். இதனாலேயே இப்பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-73)

## உதயவாக்கு

மணிக் கணக்கில் போதனை
செய்வதிலும் பார்க்க ஒருகணப்
பொழுது உதவி புரிந்தாலே நலம்
-சீனப்பழமொழி

## நாளை

தை 12
(25.01.2005)
செவ்வாய்க்கிழமை
திதி : பூரணை
பிற்பகல் 4.47 வரை
நட்சத்திரம் : பூசம்
பின்னிரவு 2.48வரை
தைப்பூசநன்னாள்
பூரணை விரதம்
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 3.36 - 5.06
(யாவும் பழைய நேரப்படி)

# மிதிவெடி அடையாளக் குறியீடுகளை விஷமிகள் அபகரிப்பதால் சிரமம்

## கோப்பாய், நீர்வேலி தரவைப் பகுதிகளில்

வளலாய்.ஜன.24

இராணுவ நடவடிக்கைகளின்போது கோப்பாய், நீர்வேலி தரவைப் பகுதிகளில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுவருவதாக மிதிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றும்போது நாட்டப்படும் குறியீட்டுக் கட்டைகள் இனந்தெரியாதோரால் அகற்றப்படுவதாகவும், இதனால் குறிப்பிட்ட இடங்களை இனங்காண முடியாதுள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் தெரிவித்தனர். இந்த நிலை நீடித்தால் இப்பிரதேசங்களில் மிதிவெடி அகற்றும் பணிகளை இடைநிறுத்தவேண்டிவரும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் தமது பணிதொடர்ந்து நடைபெற வேண்டுமானால் அதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தருமாறு அப்பகுதிக் கிராம அலுவலர்களிடமும், சமூக அபிவிருத்தி அலுவலர்களிடமும் யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ஐ-203-178)

# கற்றல் உபகரணங்களை வழங்கி உதவக் கோரிக்கை

வளலாய்.ஜன.24

சுனாமி அலையினால் பாதிப்புற்ற மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உரிய கற்றல் உபகரணங்களை வழங்கி உதவுமாறு வடமராட்சி கல்விப் பணிப்பணிமனையினர் பொதுநிறுவனங்களிடமும் தொண்டர் ஸ்தாபனங்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அலையினால் பாதிப்புற்ற பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், சப்பாத்துகள், கற்றல் உபகரணங்கள் என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

மாணவர்களின் நன்மைகருதி தொண்டர் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட பொருள்களை வடமராட்சிக் கல்விப் பணிமனையூடாக வழங்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(கு-70-204)

# பேரவை உறுப்பினர்கள் இரத்ததானம்

சர்வதச மாணவர் பேரவையைச் சேர்ந்த சுமார் 20 பேர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு இரத்தம் தேவையாகவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் கேட்டுக்கொண்டமையை அடுத்தே பேரவை உறுப்பினர்கள் இரத்ததானம் செய்தனர். (கு-5)

# ஆதரவற்ற பிள்ளைகளை இந்துமாமன்றம் பராமரிக்கும்

## நல்லை ஆதீனத்தில் இன்று விண்ணப்பம் ஏற்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையிலான குழுவினர் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூரிலுள்ள நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இவர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து மத நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், இந்து மதப்பிரமுகர்களையும் சந்தித்து யாழ்ப்பாணத்தில் இந்துமாமன்றம் ஆற்றக்கூடிய பணிகளைப் பற்றிக் கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன், இந்துமாமன்றத்தினரால் ஆதரவற்ற பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு உதவி தேவையானவர்களிடம் இருந்தும் மாமன்ற விடுதியில் தங்கிவாழ அனுமதி பெறவிரும்பும் ஆதரவற்ற பிள்ளைகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் வைத்து மாமன்றப் பிரதிநிதியினால் இன்றும் நாளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார். (ஐ-203)


Network of Life

கரம் கொடுக்கிறோம் நாங்கள்.............



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த உயர்தர மாணவர்களுக்காக துரித மீட்டல் வழிகாட்டற் கருத்தரங்குகளை அவ்வப் பிரதேசங்களை அண்டி நடாத்துவதற்காக டயலொக் ஜீ.எஸ்.எம் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்புடன் கைகோர்த்திருக்கின்றது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதி மாணவர்களுக்கான கருத்தரங்குகள் இம் மாதம் 26 ஆம் திகதி முதல் நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள முன்னணி ஆசிரியர்களின் விரிவுரைகளுடன், அவர்களது விளக்கக் குறிப்புக்களும் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்படவுள்ளன 26, 27 ஆம் திகதிகளில் உயிரியல் மற்றும் வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகள் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் தினமும் பிற்கல் 2.30 மணி முதல் நடைபெறவுள்ளன.

வள ஆளணி :

உயிரியல் : திரு. எஸ்.கெங்காதரன் , திரு.எஸ். குணசீலன்.
வணிகக் கல்வி : திரு.எஸ் பசில்
கணக்கீடு : திரு. டீ.சாம்

Change
Transforming Their Future Today!

இதனைத் தொடர்ந்து ஏனைய பாடங்களுக்கான செயலமர்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளும், மாணவர்களும் உடனடியாக எமது செயலணியுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை உறுதி செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு : இணைப்பாளர்.
தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு.
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம்
401 / 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

TITA
TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

Dialog GSM 077 7283719 077 3153873 077 7222409
TheFuture.Today.


# சமய சந்திகளில்

தொல்புரம்,ஜன.24

வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 6 மணிக்கு சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களின் நலன் வேண்டியும் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திபெறவும் ஆயிரத்து எட்டு ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டு பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது. (8-204)

★★★

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்மன் தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.(8-204)

★★★

சுழிபுரம்,ஜன.24

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் மாலை 5.30 மணியளவில் பூசைகள் ஆரம்பமாகி அம்பாள் வீதியுலா வருதல் நிகழ்வும் இடம்பெற்றுவருகின்றது. அத்துடன், கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும் நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 11தினங்கள் திருவிழா நடைபெற்று சங்காபிஷேகம், திருவூஞ்சல் நிகழ்வுடன் உற்சவம் நிறைவு பெறும். (8-203-28)

★★★

ஏழாலை,ஜன.24

ஏழாலை வசந்தபுரம் வசந்தநாக பூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(8-203)

★★★

யாழ்ப்பாணம்,ஜன.24

தைப்பூசதினமான நாளை செவ்வாய்க்கிழமை ஏடு தொடக்கவுள்ள சிறார்கள் அனைவருக்குமான அரிச்சுவடி ஏடுகள், சமயதீட்சை பெறுபவர்களுக்கான 'நித்திய கருமவிதி' என்னும் நூல் என்பன மில்க்வைற் நிறுவனத்தினரால் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இவை தேவைப்படுவோர் கே.கே.எஸ். வீதியில் உள்ள மில்க்வைற் சோப் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என மில்க்வைற் நிறுவன உரிமையாளர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.(8-203)

★★★

யாழ்ப்பாணம்,ஜன.24

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் தைப்பூசத் திருநாள் நாளை 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிமுதல் பிற்பகல் 4மணிவரை நடைபெறவுள்ளது. (8-202)

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வலிகாமம் தெற்குப் பிரதேச சபை மண்டபத்தில் சங்கத் தலைவர் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-117-204)

# மரண அறிவித்தல்

## திருமதி வீரகத்தி சின்னாச்சிப்பிள்ளை

(ராசமணி)



நாகர்கோவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரப்பரியார் ஒழுங்கை, பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரகத்தி சின்னாச்சிப்பிள்ளை 21.01.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும் ராசசிங்கம் (நோர்வே), தங்கமணி (லண்டன்), செல்வமலர் (லண்டன்), சிவானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோதிமலர், பழனியாண்டி, ஆறுமுகம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் கண்ணையாவின் அன்புச் சகோதரியும் அன்னபாக்கியம் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2005) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்லிபுரப்பரியார் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.* (41205)(24-18)

தகவல்:
கண்ணையா (ஐயாத்துரை)


Earn An Internationally Recognized Diploma in IT




மாணவர்களே!
சர்வதேச பல்கலைக் கழகங்களில் பட்டதாரியாகிட விரும்புகிறீர்களா?
இன்றே எம்முடன் இணையுங்கள்




NIIT enabled by cyberSKILLS
enabling the young professional for a better future

| Diploma Courses | Durations |
|---|---|
| Certificate In Information Technology | 6 Months |
| Honours Diploma In Information Technology | 1 Year |
| Professional Diploma In Information Technology(DNIIT) | 2 Years |
| **Advance Technology Courses** | **Durations** |
| MCSE Windows Server 2000 Platform | 9 Months |
| MCSD on.Net Technologies | 8 Months |
| VB.Net | 48 Hrs |
| ASP.Net | 48 Hrs |
| Java Programming | 72 Hrs |
| Enterprise Java Programming | 72 Hrs |
| XML | 32 Hrs |
| Microsoft SQL Server 2000 | 96 Hrs |
| **Certificate Courses** | **Durations** |
| Certificate in Web Designing | 56 Hrs |
| Certificate in Microsoft Office XP | 40 Hrs |

Get Trained by the Leader
"IDC,USA has named NIIT as the Largest Asia-Based IT Training Provider"

Call Now & Register For BCA & Get a HTML Course Free

NIIT Branches

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Bambalapitiya | 011 4 519111 |
| Kurunegala | 037 4 691000 | Trincomalee | 026 2 227767 |
| Kandy | 081 4 470900 | Jaffna | 021 2 227250 |

# திருமணக் கார் (குளிரூட்டியது)

## வாடகைக்கு



- ★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
- ★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P 077-3086939,
0777-246117,
077-6018467. (41169)(12-4-46)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


உ
சிவமயம்

# பௌர்ணமிகாலச் சிந்தனைகள் -I

இடம் : இந்துசமயப் பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம்
காலம் : இன்று (24-01-2005) திங்கட்கிழமை
பி.ப. 4 மணி (புதிய நேரம்)
தலைமை : அருட்கவி கலாநிதி சீ. விநாசித்தம்பி
கலந்துரையாடல் : இந்துக்களும் சமகாலச் சவால்களும்.

## விசேட நிகழ்ச்சி

### இசைவிருந்து

பாட்டு : திரு.த.றொபேட் மிருதங்கம் : திரு.சி.மகேந்திரன்
வயலின : திரு.அ.ஜெயராமன் முகர்சிங் : திரு.க.நந்தகுமார்

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

(விளம்பர அன்பளிப்பு)
(41159) சீமாட்டி புடைவைக் கடல்,
(46-14-15) 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# வாடிக்கையாளர்களுக்கு!
## ஓர் அன்பான வேண்டுகோள்

லிங்கன் கிறீம் ஹவுஸ், *119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு எவ்வித கிளைகளும் கிடையாது. எனவே, சில போலிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி தரக்குறைவான பொருளை விநியோகித்து வருகின்றார்கள். ஆதலால், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்.
(சி-40569)(21-17-18) லிங்கன் கிறீம் ஹவுஸ்.


# நெஞ்சைவிட்டு நீங்காத 10ஆம் ஆண்டு நினைவுத் துளிகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 05 - 04 - 1926 | 15 - 01 - 1995 |

## அமரர் ஏரம்பு சோதிலிங்கம் (மண்டைதீவு)

திதி:24-01-2005

அன்புக்கரம் நீட்டி எம்மை
அரவணைத்தீர்கள்....
அறிவுத்திறன் கொண்டு வாழ்வில் வெற்றி
கண்டீர்கள்!
சோதி என்ற நாமம் பாரினில் புகழ்பெற
வைத்தீர்கள்.
பத்து ஆண்டென்ன எத்தனை ஆண்டுகள்
மறைந்தாலும் ஆறுமோ எங்கள் துயர்?

*411/2, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41153)(46-14-12)

தங்கள் நினைவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி, மைத்துனர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் குமாரசாமி லோகேந்திரம்

கடந்த 25-12-2004 அன்று சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 24.01.2005 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில நடைபெறும். அவ்வேளை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.29 சோமசுந்தரம் அவனியூ,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

\- குடும்பத்தினர்.

(சி40576)(46-14-12)

# நீங்காத நினைவலைகள்

| 5ஆம் ஆண்டு | | | 9ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| மலர்வு | உதிர்வு | | மலர்வு | உதிர்வு |
| 29 - 11 - 1913 | 24 - 01 - 2000 | | 02 - 02 - 1923 | 17 - 02 - 1996 |



அமரர்
*மனுவல் மிக்கேல்பிள்ளை*



அமரர்
*மரியப்பிள்ளை மிக்கேல்பிள்ளை*

எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது!
எங்கள் ஆன்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

32, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (40801)(46-12-14)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# ஆழிப் பேரலை அனர்த்தத்தில் அள்ளுண்டவர்களின் 31ஆம் நாள் நினைவு



தோற்றம் : 26.05.1929
மறைவு : 26.12.2004

அமரர்
## பேதுருப்பிள்ளை ஜோன் லோறட்



செல்வி
## அருளானந்தம் அனற் பிறின்சியா

தோற்றம் : 19.08.1993
மறைவு : 26.12.2004

(41162)

*அன்புடன் பார்த்த அருமை முகத்தை இனி எப்போது காண்போம்? ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத்தெய்வங்களின் மறைவுச்செய்திகேட்டு அனுதாபந் தெரிவித்த அன்புள்ளங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நாளை (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு தாளையடி அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தற்காலிக முகவரி :-
பளை, வண்ணாங்கேணி.

\- அருளானந்தம்
குடும்பத்தினர்.

# நெஞ்சகலாத நினைவஞ்சலி



அமரர்
## இராசப்பர் மகாலிங்கம்
(தேசிய துணைப்படை வீரர் - கப்டன் மகாலிங்கம்)
(பெற்றோலையா)



அமரர்
## தர்மகுலராசா இன்பநாதன்

| | | |
|---|---|---|
| 26-06-1952 | பிறப்பு | 29-04-1978 |
| 26-12-2004 | இறப்பு | 26-12-2004 |

எங்கள் வாழ்வின் விடிவெள்ளியாக இருந்தீர்கள்!
உங்கள் திசைபார்த்து வாழ்ந்து வந்த எங்களை
திசை தெரியாமல் தவிக்கவிட்டு எங்கு போய் மறைந்தீர்கள்?
அள்ளி அள்ளித் தந்தாள் கடல் அன்னை - அவள் உங்களை
அள்ளிச் சென்ற செய்தி கேட்டு அலை அலையாக வரும்
கண்ணீரை அடக்கமுடியாமல் அழுதே துடிக்கின்றோம்.

நாளை (25-01-2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது தந்தையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதிகோயிலடி, தூபியடி, தீருவில்,
வல்வெட்டித்துறை, வல்வெட்டித்துறை. (40995)(4612-14)

அன்பு மனைவி, மக்கள்,
உறவினர் குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## 26.12.2004 அன்று இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு, அகாலமரணமடைந்த......



அன்னைமடியில் 24 12 1937

இறைவனடியில் 26 12 2004

### திருமதி சவுரிமுத்து பிரான்சிஸ்கம்மா

(செல்வம்)

அன்னார் காலஞ்சென்ற அமரர் சவுரிமுத்துவின் மனைவியும் காலஞ்சென்ற அன்னமேரி, தேவதாஸ் (கனடா), ராணி, றீற்றா, லெனிற்றா, மகேந்திரன் (ஆஸ்திரேலியா), அனிற்றா (ஆஸ்திரேலியா), ரவீந்திரன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் மதுரநாயகம் (உபதபாலதிபர்), ஜேமணி (கனடா), சூசைப்பிள்ளை, இசிதோர், இராசரத்தினம், பிலிப்தாஸ் (ஆஸ்திரேலியா), வினாசியா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் தயாளினி, தயாளன், அகிலன், றெறி, ரீனா(கனடா), டிமல், பிளோசா, டினேஸ், பிரசாந்தி, பிரதீபன், பிரதீக்கா, மேனகா, வினோத், மிதுனா, ஸ்ரெபன் (ஆஸ்திரேலியா) டெனிஸ், டெனிசா, கிஷோர் (ஆஸ்திரேலியா), கிறிஸ்ரீனா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.



அன்னைமடியில் ✱.07.1955

இறைவனடியில் 26.12.2004

### திருமதி லொறற்றாசோதி மதுரநாயகம்

(அன்னமேரி)

அன்னார் காலஞ்சென்ற திருமதி சவுரிமுத்து பிரான்சிஸ்கம்மா தம்பதி களின் அன்பு மகளும், மதுரநாயகம் அவர்களின் (உபதபாலகர் செம்பியன் பற்று) அன்பு மனைவியும் தயாளினி, தயாளன், அகிலன் ஆகியோரின் அன்புத்தாயாரும் றொபின்சன் (முகா மைத்துவ பீட விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் மாமி யாரும் காருண்யாவின் பேர்த்தியுமா வார்.



அன்னைமடியில் 21.04.2004

இறைவனடியில் 26.12.2004

### செல்வன் கெவின்றாச் கெனிஸ்காந்

(கெனிஸ்)

இவர் கெவின்றாச் - பிரதீக்கா தம்பதி களின் அன்பு மகனும் அஜெயின்சின் அன்புத் தம்பியும், மனுவல்பிள்ளை இசிதோர், றீற்றா ஆகியோருடைய பேரனும், பிரதீபனின் (லண்டன்) மரு மகனும் பிரசாந்தி, றொபின்சனின் பெறாமகனுமாவார்.


இவர்களின் ஆன்ம சாந்திக்காக நாளை (25 - 01 - 2005) செவ்வாய்க்கிழமை புலோப்பளை புனித பேதுருவானவர் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் . அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :-
மதுரநாயகம்

பா. மதுரநாயகம் - உபதபால் அதிபர்,
செம்பியன்பற்று.

(41114) உதயன் Graphics

# முதலாம் ஆண்டில் முகிழ்க்கும் நினைவுகள்



### திருவாட்டி தயாபரராசா இராசம்மா

(காரைநகர்- பலகாடு)

தோற்றம் 04.12.1931

மறைவு 04.02.2004

திதி: 24.01.2005

தந்தையின  ை நாமிழந்து தவித்த காலை
தாங்கிநின்று எந்தவித தளர்வுங் கொள்ளா
சிந்தையளாய் உறுதியொடு சீராய் வாழச்
சிறந்தகல்வி பெறவைத்துச் சிறப்புங் கண்டு
அந்தவினை வலியாலே அணைந்த உன்னை
அன்னையென நாம் பெறவே என்னதவம்
செய்தோம்.
எந்தையிறை தாளின்கீழ் இருந்தே நாளும்
எம்தாயே நீபெறுக என்றும் சாந்தி!

தொலைபேசி ஒழுங்கை,
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

-குடும்பத்தினர்.

(41173)(39-11-15)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் அரசியல் வேறுபாடுகள் இருக்கக்கூடாது

## இணைந்து செயற்படுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.24

'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விடயத்தில் அரசியல் வேறுபாடுகள் பார்க்கக்கூடாது.

உதவும் நாடுகளும் அரசும் வேறு சகல தரப்பினரும் ஒன்றிணைந்து உதவிப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

'சுனாமி' அனர்த்தம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டிருக்கின்ற அறிக்கையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடலிற்கு அருகில் இருக்கும் இடங்களில் பாரிய உயிர்ச் சேதமும் உடைமைகளுக்கான சேதமும் ஏற்பட்டிருப்பதை மிகுந்த மனவருதத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழு கவனத்திற்கொள்கிறது.

டிசெம்பர் 26 ஆம் திகதி சுனாமியால் ஏற்படுத்தப்பட்ட இந்த நிகழ்வு உலகில் நடைபெற்ற இயற்கை அனர்த்தங்களில் மனிதர் என்றுமே காணாத பாரிய அழிவுகளை ஏற்படுத்திய ஒன்றாகும். இச்சம்பவங்களினால் அதிர்ச்சியுற்ற நாட்டுமக்கள் அனைவருடனும் சேர்ந்து இந்த அனர்த்தத்தினால் பதிப்புற்றவரின் துயரத்தில் இந்த ஆணைக்குழுவும் பங்குகொள்கின்றது.

அயலிலுள்ள நாடுகளில் இவ்வகையில் துன்பத்திற்கு உள்ளாகிய அனைவரையும் ஆணைக்குழு நினைவு கூருகின்றது.

நாட்டில் பல இடங்களில் தங்குமிடங்களிலும் முகாம்களிலும் இருந்துவரும் மக்களுக்கு ஆணைக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறது. இப்பாரிய இயற்கை அனர்த்தத்தின் பாதகங்களிலிருந்து இந்த நாட்டை மீட்டு எடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசிற்கும், பல்வேறு பகுதிகளில் இருக்கும் ஏனைய பங்குநர்களுக்கும் இந்த ஆணைக்குழு வேண்டிக்கொள்வது யாதெனின், எந்தவகையிலான அரசியல் அல்லது வேறு விடயங்களைக் கருத்திறகொள்ளாது கூடியவரையில் இணைந்து செய்யப்படவேண்டும் என்பதே.

ஏற்கனவே பல்லாண்டு காலமாக இந்த நாடு எதிர்நோக்க நேர்ந்த பல பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த அனர்த்தத்தினால் இலங்கை அரசு பாரிய ஒரு சுமையைத் தாங்கவேண்டி வந்துள்ளது என்பதையும் இந்த ஆணைக்குழு கவனத்திற்கொள்கிறது.

எது எவ்வாறாயினும் அரசு மக்களின் பாதுகாவலர் என்ற பங்கின் முக்கியத்துவத்தை ஆணைக்குழு எடுத்துரைக்க விரும்புகின்றது.

ஒவ்வோர் அரசும் தனது மக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருப்பது அதன் கடமை என்பது சர்வதேச பிரமாணங்களுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

எமது நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருக்கும் சிவில் சமுதாயம் இச்சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ளவேண்டிய சவால்களைத் துணிகரமாக ஏற்றுக்கொள்கின்றது என்பதை மதிப்புடனும் மிகுந்த அபிமானத்துடனும் ஆணைக்குழு அவதானிக்கின்றது.

இச்சமுதாயம் இந்த அனர்த்தத்தினால் நேரடியாகப் பாதிப்புற்றோருக்கு ஆதரவளிப்பதில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றது.

சமுதாயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாக அமையக்கூடியது, மக்கள் தற்போது காட்டும் இரக்க மனப்பான்மை என்பது வெளிப்படை.

அதேவேளையில், சர்வதேச சமூகம் இந்த அனர்த்தத்தையிட்டுக் காட்டிவரும் தனித்துவமான, அளவு கடந்த ஆதரவை ஆணைக்குழு கவனத்திற்கொள்கிறது. இப்பாதகமான நிகழ்வுகளினால் பாதிப்புற்றோருக்கு உதவியளிப்பதற்கு அந்நிய அரசுகளும், சர்வதேச அமைப்புகளும் பல்வேறு நாடுகளின் மக்களும் முன்வந்திருப்பது இவ்விடயத்தில் அவர்களுக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

உண்மையிலேயே வரலாற்றாசிரியர்கள் இதனை இவ்வுலகின் நவீன வரலாற்றில் மிகவும் உருக்கமான தருணம் எனக் குறித்துக் கொள்வார்கள். இவ்வகையில் பாதிப்புற்ற மக்கள் வாழ்பகுதிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு புதிய உபாயங்களையும், வழிமுறைகளையும் உலகளாவிய ரீதியில் மக்கள் அர்ப்பணிப்புடன் ஏற்றுச் செயற்படுவார்கள்.

### மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

இந்த நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இக்கட்டான நிலையில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த நாட்டின் பாதுகாப்பையும் புனர்வாழ்வையும் நிவாரண வேலைகளையும் கவனிக்க எனப் பல செயலணிகள் அமைக்கப்பட்டுப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு இருக்க வழிமுறைகளைக் காணவுள்ளது.

இந்த அரசு தொடர்ந்தும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்தாசை வழங்கும்படி நிதி வழங்கும் அமைப்புகளினதும், அரசினதும் ஆதரவைப் பெறமுயற்சிக்கும்.

✪ மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அடிப்படையாகக் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமான மனித உரிமைகளில் ஒன்று ஒரு சடலத்தை யாருடையதென அடையாளம் காணுதல் ஆகும். தற்போதுள்ள நிலை காரணமாகப் பல சடலங்கள் அடையாளம் காணப்படாமலே அடக்கம் செய்யப்படுகின்றன. எல்லாச் சடலங்களையும அடையாளம் காண்பதற்கு வைத்திய நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் அத்தியாவசியமாகும். அப்படிச் செய்தால் தான் இறந்தவருடைய வாரிசான உறவினர்களுக்கு அது பற்றித் தெரிவிக்கலாம். இந்த விடயத்தை அரசும் முக்கியமானதொரு விடயமாகக் கருதி முன்னுரிமை கொடுத்துச் செயற்படவேண்டும்.

✪ சட்டத்தின் ஆதிக்கம் என்னும் விடயம் சம்பந்தமாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்பது மனித உரிமைகள் ஆணைக்குழு கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியமானதொரு விடயமாகும். நாட்டில் வழமையான நாடளாவிய ரீதியில் கூட இவ்விடயம் பற்றிக் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. தற்காலத்தில் கொள்ளையடித்தல், கற்பழித்தல் அல்லது வேறு வகையான குற்றங்கள் நடைபெறுவதாகக் கவலைக்குரிய தகவல்கள் ஆணைக்குழுவை வந்தடைகின்றன. தற்போதைய காலத்தில் பொலீஸாரும் பாதுகாப்புப் படைகளும் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்து சட்ட ஒழுங்கைப் பேண அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இவ்வகையான குற்றங்களுக்கு ஆளாகக்கூடிய மக்கள் வசிக்கும் இடங்களாகிய நலன்புரி முகாம்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படுதல் வேண்டும். ஆகவே, இவ்வகையில் வாழும் பாதிப்புற்றவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த அலுவலர்களுடன் சேர்ந்து செயற்படும் இத் தருணத்தில் ஏதாவதோர் உரிமை மீறப்படின் பொதுமக்கள் பிராந்திய அலுவலகங்கள் அல்லது இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான செயற்றிட்ட அலுவலகங்கள் (IDP Project Office) அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமையகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.

✪ இப்பகுதியிலுள்ள சிறுவர்கள், பெண்கள் போன்ற எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழு அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றது. பெண்களும், பிள்ளைகளும் தங்களுக்கு உழைத்துக் கொடுப்பவர்களை இழந்துள்ளார்கள். அவர்களுடைய வீடுகளும் உடைமைகளும் வாழ்வியற் பொருள்களும் அழிவதைக் கண்ணால் பார்த்துள்ளார்கள்.

இவர்களில் சிலர் துஷ்பிரயோகங்கள் செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சூறையாடப்பட்டும் உள்ளதாகவும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வகையான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கச் சட்டத்தைப் பேணச் செய்யும் பொறுப்புள்ள அதிகாரிகளும், சமூக சேவை உத்தியோகத்தர்களும், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் துரிதமாகச் செயற்பட்டு அவற்றைத் தவிர்த்துக்கொள்வது அவசியமாகும். இவ்வகையான நிகழ்வுகள் நடைபெறுவதைத் தடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழு விழிப்பாக இருக்கும்.

✪ சிறுவர்கள எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்று அவர்கள் கல்வி கற்கும் உரிமையாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பிள்ளைகள் துரிதமாக அவர்களது கல்வியைத் தொடர ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படல்வேண்டும்.

இவ்விடயத்தில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அதாவது, இடிந்துபோன கட்டடங்களை மீளமைத்தலும், கதிரைகள், மேசைகள் முதலிய பொருள்களையும் அப்பியாசப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் முதலியவற்றை மீளப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும். இவற்றைச் செய்வதற்குப் போதியளவு நிதி யுனிசெவ்விடமிருந்தும் (UNICEF) ஏனையோரிடமிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தறுவாயில் தேவைப்படுவது யாதெனின், தலைமைத்துவம் ஆகும்.

சமுதாயத்தின் பூரண ஒத்துழைப்புடன் பிள்ளைகள் மீண்டும் பாடசாலைக்குச் செல்வதை உறுதிப்படுத்தச் சமூக சேவைகள் அமைச்சுகளுடனும் யுனிசெவ்வுடனும் (UNICEF) நாம் வேலைசெய்யத் தயாராக உள்ளோம்.

✪ இங்கு நடந்தது போலான அனர்த்தங்கள் மன அழுத்தத்தையும் அச்ச உணர்வுகளையும் மனநோயையும் ஏற்படுத்தக்கூடும். இலங்கையிலே இவ்வகையானதொரு நிலையைச் சமாளிக்கத் தேவைப்படும் கட்டமைப்பினையோ, ஆற்றல்களையோ அல்லது தேவைப்படும் மருந்து வசதிகளையோ பெறக்கூடிய நிலையில்லை. சௌக்கியமாக இருத்தலுக்கான உரிமை மனோவியல் ரீதியாகப் பாதிப்பின்றி இருக்கும் உரித்தையும் உள்ளடக்குகின்றது. இவ்விடயத்திற்கு விசேட கவனம் செலுத்தும்படி அரசையும், சர்வதேச அமைப்புகளையும் வேண்டுகின்றோம். இவ்விடயம் தேசிய ரீதியில் நெடுநாள்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதொரு விடயமாகையால் இவ்விடயத்திற்குக் கவனம் செலுத்தும்படி தகுதிபெற்ற மனோவியல் வைத்தியரிடமும் உளவியல் வைத்தியர்களிடமும் ஏனைய வைத்தியர்களிடமிருந்தும் ஆணைக்குழு வேண்டி நிற்கின்றது. மனப்பயத்தினால் பாதிப்புற்றோருக்கு உதவக்கூடிய வகையிலான ஆற்றல்களை உள்ளூர் அலுவலர்களைப் பயிற்றுவிக்கும்படி அரசையும், சர்வதேச அமைப்புகளையும் இந்த ஆணைக்குழு கேட்டுக்கொள்கின்றது. இவ்வகையான பயிற்சி விசேடமாகப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தாதிமார்களுக்கும் கொடுக்க வேண்டியது முக்கியமாகும்.

✪ உலக சமுதாயத்தில் தாராள மனப்பான்மையினால் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள உதவித் தொகைகள் எமது சமுதாயத்தைப் பாகுபாடின்றிப் பக்கச்சார்பற்ற வகையில் செயற்பட்டுக் கட்டியெழுப்ப ஒரு சந்தர்ப்பமாகும். அவ்வகையில் பெறப்பட்ட உதவித்தொகைகள் நியாயமான வகையிலும், தான்தோன்றித்தனமாகவன்றியும் சமமாகப் பகிர்ந்தளித்தல் அவசியமாகும். சுனாமியினால் பாதிப்புற்றோர் மாத்திரமன்றி வறுமை நிலையிலுள்ள ஏனையோருடைய நிலையையும் மேம்படுத்துவற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக உதவி வழங்கும் சமூகங்களும், உள்ளூர் மக்களும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இந்த அனர்த்தத்திலிருந்து உண்மையிலேயே நாம் மீளவேண்டுமாயின் உதவிகளைச் சமமாக அனைவருக்கும் வெளிப்படையாகவும், எல்லோருக்கும் புலப்படக்கூடியவகையிலும் செய்வது மிகவும் அவசியமாகும். மீள் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமான செயற்பாடுகளை மனித உரிமைகள் கோணத்திலிருந்து கண்காணிப்பதற்கென விசேட பிரிவொன்றை அமைக்க மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது. (த-7) ★



சுனாமி கடலலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர் எஸ்.எஸ்.எஸ்.சிதம்பரநாதன், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி சி.கதிரவேற்பிள்ளையிடம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

# வடக்கில் அழிவடைந்த கிராமங்களை சுற்றாடல் அதிகாரசபை புனரமைக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.24

வடக்கில் சுனாமி ஆழிப்பேரலையால் அழிந்துபோன கடற்கரையோரக் கிராமங்களை புனரமைத்துக் கொடுப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

வடக்கில் அரச கட்டுப்பாட்டு பகுதியான யாழ்ப்பாணத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தனியாகவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும் இணைந்து இந்தப் புனரமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் டி.கொஸ்ரா தலைமையிலான எட்டுப் பேர் அடங்கிய குழுவினர் கடந்த வியாழன் யாழ்ப்பாணம் வருகைதந்தனர்.

நெதர்லாந்து, நோர்வே, சுவடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

இவர்கள் யாழ்.செயலகத்தில் இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலகத்துக்குச் சென்று அலுவலக அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த கிராமங்களைப் பழைய இடங்களிலேயே புனரமைப்பதா அல்லது வேறு இடங்களில் புதிதாக இருப்பிடங்களை அமைப்பதா என்பதைப் பற்றி யாழ்.பல்கலைக்கழகத்துடனும் யாழ்.அரச செயலகம், அரச திணைக்களங்களுடனும் ஆராய்ந்து வருகின்றனர்.

முதற்கட்டமாக மணற்காடு கிராமம் புனரமைப்புச் செய்யப்படும் என்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய கிராமங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவினர் நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு, தாளையடி, மருதங்கேணி உட்பட வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் செல்லவுள்ள இவர்கள், அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். (த-7)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜன.24

தலையாழி, கொக்குவில் ஸ்ரீ ஞானவைரவர் கோவில் அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. எதிர்வரும் முதலாம் திகதி வரை திருவிழா நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 4 மணிக்கு 'மகாபாரதம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (த-202)

# நவகலச அபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.24

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செந்தில்கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு நாளை முற்பகல் 10 மணிக்கு நவகலச அபிஷேகமும் அர்ச்சனை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. (-203)

## 31ஆம் நாள் இதய அஞ்சலியும் இறை பிரார்த்தனையும்

யா/பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலய
சிரேஷ்ட ஆசிரியர் திரு.க.சிவபாலன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**சுப்பையா கந்தையா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இன்றைய முப்பத்தோராம் நாளில் இயத அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/பன்னாலை சேர்.கனகசபை வித்.
*தெல்லிப்பழை.*
(40916) (24)

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
பாடசாலை நலன்விரும்பிகள்.

## நெஞ்சைவிட்டு அகலாத நினைவு அலைகள்

5ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு



அமரர் *இ.துரையப்பா*
பிறப்பு:24-08-1917
இறப்பு: 15-07-2000



திருமதி *து.செல்லம்மா*
பிறப்பு:10-11-1924
இறப்பு: 04-02-2004

*மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கைதடிமத்தி,
கைதடி. (41190)(46)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இலவச பாடநூல் வழங்க ஏற்பாடு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு உதவுமுகமாகப் பாடசாலை நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை லங்கா புத்தகசாலையினர் இலவசமாக வழங்கவுள்ளனர்.

தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரையான பாடப்புத்தகங்கள், பயற்சிப்புத்தகங்கள், உசாத்துணை நூல்கள் போன்றவற்றைப் பாதிக்கப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு வழங்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலைகளிலுள்ள தரங்களின் விவரங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் இலககம் 234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் அல்லது கொழும்பு-12இல் உள்ள லங்கா புத்தகசாலையுடன் கடிதமூலம் தெரியப்படுத்த வேண்டும். (ப-203)

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

சிவாஜி ஜெகன் பெண்
விக்னேஸ்வரன் மகள் வர்ஷிகா
வராம்பற்றை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

- வழக்காளி -

வழ. இல. மணநீக்கம் / 494

எதிர்
சிவாஜி ஜெகன்
வராம்பற்றை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்

- எதிராளி -

மேற்படி எதிராளிக்கு,

இவ்வழக்கு 2004ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 07ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் தோற்றியிருக்கவும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது,

எதிராளிக்குரிய அழைப்புக் கட்டளை பத்திரிகையில் பிரசுரம் செய்து பதிற் சேவிப்புச் செய்யப்பட்டபோதும், எதிராளி மன்றுக்கு சமுகமளிக்காத காரணத்தினால், ஒருமுகவிளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, "வ1" என அணைக்கப்பட்ட ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றைக் வழக்கேட்டுடன் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு, வழக்காளிக்கும் எதிராளிக்கும் 12.03.2004 அன்று நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வன்மமாக உறவறுத்து வாழ்ந்துவருகிறார் என்ற காரணத்துக்காக ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமாகுமெனக் கட்டளையிடப்பட்டுப் பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

எனவே, இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வை ஆக்கப்பட்டபின் வழக்காளி தனது கன்னிப்பெயரான விக்னேஸ்வரன் மகள் வர்ஷிகா என எதிர்காலத்தில் பாவித்து வரலாமென்றும் திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் வழக்காளி அனுபவிக்க உரிமையுடையவர் என்றும் கட்டளையிட்டுப் பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகிறது.

இதன் பிரதி பத்திரிகையின் விளம்பரப்படுத்தப்பட்டு மூன்று மாதங்கள் கழிந்தும் எதிராளி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றாகத் தீர்வையாக்கப்படும்.

2004ஆம் அண்டு ஐப்பசி மாதம் 07ஆம் திகதி

ஒப்பம்: இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி. யாழ்ப்பாணம்.
நீதிமன்றின் கட்டளைப்படி.
து.சிறீமோகன்
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்.
யாழ்ப்பாணம். 22.12.2004

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி
பவானி சற்குணராசா.
(41195) (24-18)

# நூலகத்தில் அங்கத்தவராக நிதியுதவி

ஊர்காவற்றுறை,ஜன.24

அனலைதீவில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அங்குள்ள பிரதேச சபையின் பொதுநூலகத்தில் அங்கத்தவராக இணைவதற்கான நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனலைதீவிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வசிப்பவரான ரமேஷ் கிருஷ்ணமூர்த்தி என்பவரே மேற்படி உதவிகளை வழங்கியுள்ளார்.

இந்த நிதிமூலம் பாடசாலையில் தற்போது கற்றுவரும் மாணவர்கள், பாடசாலையைவிட்டு விலகியர்கள் என மொத்தம் 95 பேர் நூலக அங்கத்தவராக இணைந்துள்ளனர்.(8-203-16)

## ஒத்துமாறல்

மேல்மாகாண மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலையில் உள்ளவர் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு:
(41201) 0776103233





## ஸ்ரார் பெண்கள் அழகுக் கலை நிலையம்

பயிற்சி வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம்: 25.01.2005
செவ்வாய்
நேரம் 10.00 a.m.

- மணப்பெண் அலங்காரம்
- கேக் ஐசிங்
- தையல்
- சாறி அலங்காரம்
- பற்றிக் வர்ணம் தீட்டுதல்
- கிறிஸ்ரல் உபகரணம்
- பொக்கே வடிவமைத்தலும் மலர் அலங்காரம்
- கைப்பணிகள் (41168)

தொடர்புகளுக்கு:
ஸ்ரார்
பெண்கள் அழகுக் கலை நிலையம்
இல. 910, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

## சிதைந்துவிட்ட சிற்பங்களின் 31ஆம் நாள் நினைவும்
# அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
1942 — 1986
05 — 12
06 — 04



அமரர் **இராசையா மகேஸ்வரி** இவரது பேர்த்தியார் → **இரவீந்திரராசா ஜெசி**

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.

(கடந்த 26-12-2004 அன்று சுனாமி அனர்த்தத்தின் போது இயற்கை எய்தினர்)

**சிறிய வயதினிலே நாம் தந்தையினை இழந்திருந்தும் அம்மா உங்கள் கையணைப்பில் கொஞ்சி மகிழ்ந்திருந்தோம். அதை மிஞ்சி ஒருதுயர் வந்திடினும் ஆறுதல் அடைந்திட அம்மா நீங்கள் அறிவுரை சொல்வீர்கள்!, - அன்று அலை வந்தபோது ஏனம்மா எமைவிட்டு ஆகுதியானீர்கள்! உங்கள் தலைமகன் இன்றியே பேர்த்தி தாயுடன் வாழ்ந்திட பேரலை வந்து ஊட்டி வளர்த்த உங்களுடன் கூட்டிச் சென்றதுவே.**

**என்றும் உங்கள் ஆத்மா சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.**
ஓம் சாந்தி...! சாந்தி....!! சாந்தி....!!!

எமது அன்புத் தெய்வத்தினதும், அன்புச் செல்வத்தினதும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (25-01-2005) செவ்வாய்க்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மூலிகைத்தோட்டம்,
முகாலம் பகுதி,
திருவையாறு, கிளிநொச்சி. (41089)(46-18-24)

இவர்களின் பிரிவால் துயருறும்:
**அன்புப் பிள்ளைகள், சித்தப்பாமார்.**

# 31ஆம் நாள் நினைவு
## (25-01-2005)

மலர்வு
14
-
02
-
1984



உதிர்வு
26
-
12
-
2004

## செல்வன் செல்வரட்ணம்
## நிக்ஷன் ராஜசெல்வம் (நிக்ஸன்)

அன்பு மைந்தனே! ஆருயிர் சோதரனே!
ஆறாத வேதனையில் ஆழ்த்திவிட்டெம்மை
அமைதியில் துயில் கொண்டு நீ வாழ்வதென்ன?
ஆனது ஒரு திங்கள், ஆனாலும்கூட
உன் உறவை ஒருபோதும் நாம் மறவோம்!

அன்பான உன் உருவம் எமைவிட்டு
அகல மறுக்குதடா ஆறாத்துயர் தந்து
எப்போது காண்போம் உனது முகம் இப்புவியில்?
ஆசையாய் பேசுமுந்தன் அன்புமொழி
அன்றாடம் கேட்குதே ரீங்காரமாக
ஆண்டவன் திருமுன் உன் ஆத்மா சாந்திபெற
அன்புத் தெய்வத்தை அனுதினமும் இறைஞ்சுகின்றோம்!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாளை (25-01-2005) செவ்வாய்க்கிழமை தும்பளை புனித லூர்து அன்னை ஆலயத்தில் காலை 9.00மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்நிகழ்விலும் வீட்டில் நடைபெறும் நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

லூர்து மாதா கோயிலடி,
தும்பளை,
பருத்தித்துறை. (41186)(26-18-24)

இவரின் பிரிவால் துயருறும்:
**- குடும்பத்தினர்.**

# கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை நடத்தும் மாதாந்த முழுநிலா விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சீரிய கலாசாரத்திற்குக் கல்வியின் பங்கு' என்னும் தலைப்பில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் 'கலையும் வாழ்வும்' என்னும் தலைப்பில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் சு. கணபதிப்பிள்ளையும் உரையாற்றவுள்ளனர். (ப-202)

★★★

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சியக் குழுவின் ஏற்பாட்டில் 'சுனாமி மானிட அழிவுகள் முதல் அரசியல் நகர்வுகள் வரை' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில ஆரியகுளம் முன்பாகவுள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-203)

# சமயப் பணிமூலம் கிடைத்த பணத்தையும் திருப்பணிகளுக்கே பயன்படுத்திய அம்மையார்

## சிவத்தமிழ்ச் செல்விக்குப் பேராசிரியர் புகழுரை



வலி.வடக்கு,ஜன.24

வெளிநாடுகள் சென்று சமய ஒளிபரப்பியது மட்டுமன்றி, அவ்வகையில் கிடைத்த பணத்தைச் சமயத்துக்கும், ஆலய அபிவிருத்திக்குமே பயன்படுத்தியவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்று யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80ஆவது அகவை முத்து விழாவையொட்டிக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'காலத்தின் கைவிளக்கு' என்ற நூலும், ஜேர்மன் நாட்டில் வசிப்பவரும் குரும்பசிட்டியைச் சேர்ந்தவருமான கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரனின் சிவத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவும் கலாநிதி சண்முகதாஸ் தலைமையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி சண்முகதாஸ்:-

முத்தை அணிபவர்களுடைய உடல் குளிர்ந்த வண்ணமே இருக்கும். அதே போன்று அம்மா அவர்களும் பல்வேறு பணிகளையும் செய்து இங்கும் ஒரு குளிர்மையை ஏற்படுத்தினார். அம்மா அவர்களின் சேவைகளைக் கருத்தில் கொண்டு அம்மாவை சிவத்தமிழ்ச் செல்வியென்று அழைப்பதிலும் பார்க்க சிவத்தமிழ் அம்மா என்று அழைப்பதே மிகவும் சிறப்புடையதாகும்.

அம்மாவின் சிறப்புக்களில் மிகவும் முக்கியமானது தெய்வீகத்தை இன்று உலக நாடுகளில பரப்பிவருவதாகும். உலக நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், லண்டன், இந்தியா போன்ற பல நாடுகளுக்கும் சென்று சமய ஒளிபரப்பியதுடன், அங்கிருந்து கிடைத்த பணத்தையும் கூட சமயத்திற்கும், ஆலய அபிவிருத்திக்குமே பயன்படுத்தியுள்ளார்.

உலக நாடுகளில் இருந்து கிடைத்த பணம் முழுமையாக இவ் ஆலயத்தின் அபிவிருத்திக்கு அம்மா செலவிட்டமையினாலேயே இப்பாரிய ஆலயம் அமையக் கூடியதாக இருந்தது. அம்மா வெறும் ஆலயத் தொண்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இவர் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளை வளர்த்து வருகின்றார். இப் பிள்ளைகள் சாதாரண பிள்ளைகள் வாழும் வாழ்க்கையை விடத் தெய்வீக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள்.

முதியவர்களாகிய நாம் எமது முதுசங்களை அடுத்த தலைமுறையினருக்கும் வழங்கவேண்டும். அதனை வெறுமனே கைகளுக்குள் வைத்துக்கொடுக்காது அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாகத் தெரியக் கூடியதாக வழங்கவேண்டும்.

எமது நாட்டில் இருந்து கடந்த காலத்தில் பல லட்சம் மக்கள் புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். ஆனால், அவர்கள் எமக்கு ஒரு ஆபத்து, துன்பம் என்றால் துடித்துப்போகிறார்கள். அதே நேரம் எந்தெந்த வகைகளில் எமது நாட்டவர்களுக்கு உதவிகளைச் செய்ய முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

சிவத்தமிழ் என்ற நூல் நீண்டகாலமாக வெளிவருகின்ற போதிலும் இம்முறை சிறப்பாக அம்மா சம்பந்தமாக ஏற்கனவே வெளிவந்த பல கட்டுரைகளையும் தாங்கிச் சிறப்பம்சமாக வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோன்று 'காலத்தின் கைவிளக்கு' என்ற நூல் சமயகுரவர்களான நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரின் திருமுறைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. இந் நூல் சிறுவர்களுக்குப் பயன்பாடு உடையதாக இருக்கவேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி கோபால கிருஷ்ண ஐயர் உரையாற்றும்போது:-

அம்மையாரின் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இதேநேரம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வுசெய்து பட்டம் அளிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. இவரின் வாழ்க்கை வட்டம் சமயத் தொண்டுகள் சம்பந்தமாகப் பல ஆய்வுகளாகவும் கலைத்துறையில் இடம்பெற்று வருகின்றன.

தனது பணியினால் அம்மா, சமூகத்தை உயர்த்தியதன் மூலம் தன்னையும் உயர்த்தியுள்ளார் என்று கூறினார்.

மற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுகன், அருட்கவி சி.விநாசித்தம்பி, நல்லை ஆதீன குரு முதல்வர் திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்துநாகரிகத் துறைத் தலைவி திருமதி நாச்சியார் செல்வநாயகம், பி. சரவணபவன் ஆகியோரும் உரையாற்றினர். (ப-86)

## மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்ட

# இந்த அரசு எமக்கு சமாதானமாக சுதந்திரத்தை வழங்குமா?



சங்கானை,ஜன.24

இன, மத வேறுபாடின்றி சுனாமிப் பேரலைகள் இலங்கையை அழித்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுகிறது. இந் நிலையில் எமக்கு சமாதானமாகச் சுதந்திரம் கிடைக்கும் என எதிர்பார்க்கலாமா?

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் உழவர்விழா, கடந்த தைப் பொங்கல் தினத்தன்று மாவீரர் சின்னச்சுதா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த 2 ஆம் திகதி வரை அரசு எவ்வித உதவிகளையும் வழங்கவில்லை. அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்பே முக்கிய பங்காக இருந்தது.

நிரந்தர சமாதானத்திற்கு வாய்ப்பில்லாமல் போர் ஆரம்பித்து விடுமோ என்ற நிலையில் ஆழிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்டு எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிப் பெரும் பாதிப்புகளையும் ஏற்படுத்திவிட்டது.

இவ்வனர்த்தத்தின் போது ஜனாதிபதி இன, மத பேதமன்றி யாவரும் ஒத்துழைத்து நாட்டைப் பாதுகாக்க வேண்டியநிலையில் உள்ளதாகத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளுடனும் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்தாக ஊடகங்கள் மூலம் அறிந்தோம். ஆனால், எதையும் தமிழபேசும் மக்களுக்கு செய்ய விருப்பமில்லாதவாறு நடந்து கொள்கிறார்.

இப்படியான அழிவின்போது எங்களுக்கு எதிராக செயற்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த அரசிடமிருந்து எமக்குச் சமாதானமான சுதந்திரம் கிடைக்கும் என எதிர்பார்க்கலாமா. ஏற்கனவே, சமாதானம் குழப்பமடைந்துள்ளது, ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில் உள்ள சமாதானத்தைப் பாதுக்காக்க வேண்டியது எமது கடமை - என்று தெரிவித்தார்.(ப-29-204)

# சுனாமியால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நிவாரணம் நிச்சயம் பெற்றுத்தரப்படும்

## கமத்தொழில் உதவிப் பணிப்பாளர் உறுதி

வலிகாமம் தெற்கு,ஜன.24

போர்க்கால அழிவுகளுக்கு மேலாக சுனாமி கடலலை அனர்த்தம் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. அதிர்ஷ்டவசமாக விவசாயிகளுக்கு இவை பாதிப்புக்களை ஏற்படுத்தவில்லை. இப்பிரதேசத்தில் 5 பரப்பு காணி மட்டுமே சுனாமியால் பாதிப்படைந்துள்ளது. புலோலியில் 70 ஏக்கர் காணியில் நீர் புகுந்துள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நிவாரணம் பெற்றுத் தருவோம.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன விசேட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.சுந்தரேசன் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மேளன காரியாலயத்தில் அதன் தலைவர் சி.பொ.வீ.மா.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சுமார் 200 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

உதவி ஆணையாளர் கசுந்தரேசன் தொடர்ந்து கூறியதாவது-

இந்த நாட்டில் பெய்யும் ஒரு துளி மழை நீரைக்கூட கடலுக்கு செல்ல அனுமதிக்க கூடாது என கூறியிருந்தார் மகாபராக்கிரமபாகு அரசர். அந்த வகையிலேயே வழுக்கையாற்றை புனரமைத்து மழைநீரைத் தேக்குவதில் முன்னின்று உழைத்து வருகிறார் முதலியார்.

நல்லசேவைகள ஆற்றுபவர்களை இனம் கண்டு அவர்களை நல்லமுறையில் பாராட்டி கௌரவிப்பதன் மூலம் இந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயனடையச் செய்யலாம். விவசாயிகளுக்கு முதலியார் ஆற்றிய பல சேவைகளும் உணரப்பட்டே அவருக்கு தேசியரீதியில் கௌரவ விருது வழங்கப்பட்டது. மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன தலைவராக இருந்து பலகாலம் முதலியார் சேவையாற்ற வேண்டும். யாழ்.மாவட்டத்தில் எமது திணைக்களம் நல்லமுறையில் இயங்கக் காரணமாக இருந்தவர் எமது முன்னாள் அரச அதிபர் க.பத்மநாதன். கருவளையில் இருந்து கல்லறை வரை விவசாயிகள் கமநல சேவைத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்துள்ளனர் என்ற உண்மையை எமக்கு உணர்த்தியவர் இவர். அரச அதிபர் க.கணேஷ் விவசாயிகளை நன்கு அறிந்த அவர் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### நெற்காப்புறுதி

எமது பிரதேசத்தில் வருடந்தோறும் நெற்பயிர் அழிவு ஏற்படுகிறது. விவசாயிகள் காப்புறுதி செய்திருந்தால் அவர்களுக்கு நட்டஈடு பெற்றுத்தரலாம். ஆனால், எமது பிரதேசத்தில் 10 ஹெக்டேயரில் நெல்விதைத்திருந்தும் 27 ஏக்கருக்கு மட்டுமே காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. வெள்ளங்களை வெட்டி வழிந்தோடக் கூடிய வசதிகள் இருந்தால் அழிவிலிருந்து பாதுகாத்து கொள்ளலாம். குளங்கள், வாய்க்கால்கள் நில அமைப்புக்களை நல்லமுறையில் பேணி வந்தால் வெள்ளம் பாதிக்கமாட்டாது.

நீர்ப்பாசனம் தொடர்பான திட்டங்கள் எதுவும் நம்மிடையே இல்லை. நீர்ப்பாசன திணைக்களம் வழுக்கையாறு, தொண்டைமானாறு, உப்பாறு போன்றவற்றின் திட்டங்களை கொண்டிருக்கிறது. உவர் நீர் தடுப்பணைகளை மட்டும் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். முழுமையான திட்டங்களை வகுத்து நாம் செயற்பட வேண்டும் - என கூறினார்.

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் எஸ்.சுப்பிரமணிய சர்மா கீரிமலை கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி ப.மணிகண்டன், உடுவில் கமநல சேவை நிலையத் தலைவர் செ.இலகுநாதன், யாழ் மாவட்ட நீர்ப்பாசன உதவி ஆணையாளர் ஏ.சீ.விநோதராசா யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் திருமதி யோசேப் ஆகியோரும் உரையாற்றினர். (ப152)

# ஒரு பகுதிக்கு ஒதுக்கும் நிதியை வேறு பகுதிக்கு மாற்றக்கூடாது!

## ரவிராஜ் எம்.பி. வலியுறுத்து



சாவகச்சேரி,ஜன.24

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அழிவடைந்த தென்மராட்சிப் பிரதேசத்தை மீள புனரமைக்கப்பட வேண்டியது மிக அவசியமானது.

அழிவடைந்த இப்பிரதேசங்களை இப்பகுதியின் அரச உயர் அதிகாரிகள், வெளிநாட்டு அதிகாரிகள், தூதரக அதிகாரிகள் என அனைவரையும் அழைத்துவந்து காட்டுகின்றனர்.

பார்வையிட்ட அதிகாரிகள் தென்மராட்சிப் பிரதேச புனரமைப்புக்கென நிதியை ஒதுக்குகின்றனர். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி யாழ்ப்பாணத்தின் வேறு பகுதிகளுக்கு மாற்றப்படுகின்றன. இது எமக்கு கவலையை ஏற்படுத்துகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜ்.

அமரர் க.மாணிக்கம் நினைவாக நுணாவில் கிழக்கு சர்வதாதனா சனசமூக நிலைய மண்டபத்தில் றொபேட் ஏஜென்சியால் பொது நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு கணனியியல் புத்தகம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச இறப்பு, பிறப்பு பதிவாளரான க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது-

எமது மக்களையும் அவர்கள் படும் இன்னல்களையும் பார்த்து வெளிநாடுகளோ அல்லது வேறு நிறுவனங்களோ அபிவிருத்திக்காகத் தரும் பணத்தைத் திசைதிருப்ப எவரும் முயலக்கூடாது.

தென்மராட்சியில் உள்ள அரச வைத்தியசாலை எவ்வித வசதிகளும் இல்லாமல் இருக்கும் வளங்களைக் கொண்டு சேவையாற்றி வருகின்றது. இந்த வைத்தியசாலையை முதலில் புனரமைப்புச் செய்யவேண்டும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஒய்வுபெற்ற அதிபர் பூ.வெற்றிவேலு உரை நிகழ்த்துகையில் -

கல்வி வளர்ச்சிப் போக்கில் ஆங்கிலக் கல்வி மிகவும் முக்கியமானது. ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையே இன்று நிலவுகின்றது.

அத்துடன், எமது நாட்டில் கல்வித் திட்டங்களை நினைத்தவுடன் மாற்றிவிடுகின்றனர். ஆனால், வெளிநாடுகளில் புதிய கல்வித் திட்டம் ஒன்றைக் கொண்டுவரவேண்டுமானால் குறைந்தது 10 வருடங்களாவது செல்லும் என்றார். தியாகி அறக்கொடை நிலையத்தைச் சேர்ந்த எஸ்.சிவயோகன் சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் டாக்டர் சு.சி.அருளானந்தம், லயன.செ.சுப்பிரமணியம் உட்டப் பலர் உரை நிகழ்த்தினர்.

(ப-203-31)




# பயிற்சிகளை ஒழுங்காகப் பின்பற்றி யுவதிகள் பயன்பெறவேண்டும்

வலி.மேற்கு,ஜன.24

பெண்களுக்கான பயிற்சிநெறியில் இணைந்துள்ள யுவதிகள் ஒரு வருடமும் ஒழுங்காகப் பயிற்சிநெறியில் பங்குபற்றிப் பயன்பெறுவோம் என்ற தீர்மானத்துடன் இணைய வேண்டியது அவசியமாகும்! - இவ்வாறு தெரிவித்தார் வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ்.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் வட்டுக் கிழக்கு மாதர் சங்க மண்டபத்தில் ஒரு வருட தையல், மனையியல், தலைச்சோடினை டிப்ளோமாப் பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட்டுக் கிழக்கு மாதர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி எஸ்.சதாசிவம் தலைமையில் பயிற்சிநெறியின் ஆரம்பவிழா நடைபெற்றது. விழாவினைப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் அவர்களும் உதவிப் பிரதேச செயலர் திருமதி பா.தேவந்தினியும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர். பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்துப் பிரதேச செயர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பெண்கள் தீர்மானம் எடுப்பதற்குத் தயங்கின்றனர். சரியான தீர்மானத்தை எடுக்கமாட்டார்கள். இதனாலேயே கடந்த வருடம் நடைபெறற இப்பயிற்சிநெறியின ஆரம்பத்தில் கலந்துகொண்ட யுவதிகள் பலர் தாமாகவே பயிற்சிநெறியை இடையில் கைவிட்டனர். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. ஆதலால் இன்று தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்சிநெறியில் பங்குபற்றிய யுவதிகள் அனைவரும் தொடர்ந்து பயிற்சிநெறியில் பங்குபற்றி பயனைப்பெறுவோம் என்ற தீர்மானத்தை எடுக்கவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில், கலந்துகொண்ட உதவிப் பிரதேச செயலர் பா.தேவந்தினி, நிர்வாக உத்தியோகத்தர் மு.சிவராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.தேவநாயகம், ஆகியோரும் சிறப்புரையாற்றினர். (ப-175)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
**Aero Lanka**
*In Domestic Operation*
New way



ஏரோ லங்காவின்
விஸ்தரிக்கப்பட்ட
உள்ளூர் விமான சேவை
தற்போது
யாழ். – கொழும்பு – திருமலை ஆகிய நகரங்களுக்குச்
சேவையாற்றி வருவது அறிந்ததே!!!
மேலும் எமது சேவை பற்றிய
முழு விவரங்களுக்கு/தகவல்களுக்கு

தென்மராட்சி மக்களின்
நன்மை கருதி
எமது புதிய காரியாலயம்
முதல்மாடி, நவீனசந்தை,
சாவகச்சேரி.
தொலைபேசி:021 222 7979

**Jaffna Office**
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600

கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 647 |
| திகதி | 21-1-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
**5197917 - 5211322**

லக்கினம் மகரம்

வெற்றி இலக்கங்கள்
**03 28 39 46**

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 16,47,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 2,89,989 | 10/- | 28,99,890/- |
| 2.இலக்கங்கள் | 26,635 | 20/- | 5,32,700/- |
| 1.இல + லக்கினம் | 26,427 | 30/- | 7,92,810/- |
| 2.இல + லக்கினம் | 2,406 | 100/- | 2,40,600/- |
| 3.இலக்கங்கள் | 722 | 500/- | 3,61,000/- |
| 3.இல + லக்கினம் | 59 | 5,000/- | 2,95,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 3,46,247 | - | 67,22,500/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 67,22,500/-

தொடர் இல. 4241687 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**5207801-0-48**
**5202221-2-64**
**5205839-7-39**
**5206223-1-64**
**5197953-5-07**

## 22.01.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300000000 இலிருந்து 300017823 வரை

சீட்டிழுப்பு இல. 1575

**36 52 54 63** சுப்பர் எண் **06**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.39,37,050/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 39,37,050/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 23 | 5,000/- | 1,15,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 488 | 1,000/- | 4,88,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,548 | 500/- | 7,74,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,098 | 40/- | 9,23,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,847 | 20/- | 4,36,940/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,28,719 | 10/- | 32,87,190/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.85,25,050/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 85,25,050/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ... 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**300011483-3-04**
**300005712-8-97**
**300012189-7-32**
**300007374-6-40**
**300013279-2-47**

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## அச்சுவேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

வளலாய்,ஜன.24

...வேலி மேற்குக் கிராம சேவகர் பிரிவில் உள்ள அரச காணிகளில் கல் உடைத்தல், மண் அகழ்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என இப்பகுதி மக்கள் கிராம அலுவலர்களுக்கும் சமுர்த்தி அலுவலர்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இப்பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இவற்றைத் தடுத்துநிறுத்துவதற்குப் பல தரப்புகளிடமும் முறையிட்டிருந்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லையென்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-203-178)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்தோருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஜன.24

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த ஐந்து வாகனங்களின் சாரதிகளிடமிருந்து ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸாரால் மணல் ஏற்றிவந்த வாகனங்களின் சாரதிகள் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் நான்கு பார ஊர்த்திகளின் சாரதிகளுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் உழவு இயந்திர சாரதிக்கும் 10 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார். (த-117)

## மல்லாகம் ம.வியில் பழைய மாணவருக்கு கணனிக் கற்கைநெறி

வலி.தெற்கு,ஜன.24

பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்களுக்கான கணனிக் கற்கைநெறி மல்லாகம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அதன் அதிபர் நா.நாகேந்திரசீலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இவ்வித்தியாலயத்தில் கணனி வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்குமென கணனிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனிப் பயிற்சி பெறவிரும்புவோர் தமது விண்ணப்பங்களைப் பாடசாலை நாள்களில் பாடசாலையில் பெற்று விண்ணப்பிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (த-152)

## பாடசாலை உபகரணங்கள் படையினரால் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒருதொகுதி பாடசாலை உபகரணங்களை இலங்கை இராணுவத்தின் ஆகாய நகர்வு படை மீள் நிரப்பும் படையணியினர் யாழ். அரச அதிபர் கே.கணேசிடம் நேற்றுமுன்தினம் கையளித்தார்.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய மேற்படிப் படையணியினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 50 ஆயிரம் ரூபாவின்மூலம் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன.(த-202)

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.24

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை நடத்தும் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள உதயன் விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும். இக்கலந்துரையாடலில் ஊவா மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், யாழ். மாவட்டத் திட்டப் பணிப்பாளர் இ.கேதீஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் இலங்கை ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் மத்திய நலன்புரி நிலைய இணைப்பாளர் திருமதி எஸ்.புஸ்பராணி மற்றும் சர்வதேச தகவல் பரிமாற்று நிறுவக ஆசியப் பிராந்திய இணைப்பாளர் பற்றீசியா லோட் இறைன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.(த-5)

**தொலைபேசி இயக்குநர் தேவை**

எமது நிலையத்துக்குத் தொலைபேசி இயக்குநர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கணனி அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்பு:
லக்கி தொலைத்தொடர்பு நிலையம்
தும்பளை வீதி, பருத்தித்துறை.
T.P.: 021 2263150, 021 2263665
(சி-40606)

## இலையான் கொல்லி மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு; நோய் அபாயம்!

கரவெட்டி,ஜன.24

இலையான் கொல்லி மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்கள் தற்காலிக குடியிருப்புகளில் வசித்து வருகின்றனர். அங்கு பெருகியுள்ள இலையான்களால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த இலையான்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 'சோல்வறேற்' மருந்தினைச் சுகாதாரப் பகுதியினர் விசிறிவந்தனர். தற்போது இம் மருந்துக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் வசதி படைத்தவர்களிடம் இம்மருந்தினைக் கொள்வனவுசெய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-70-204)

**House for Rent or Lease**

Newly renovated modern upstair house, seven rooms, 4 bathrooms / toilets situated within 3 miles off Palaly Road. More than 8 vehicles can be parked. Suitable for Office, NGO's Expatriates.

**Contact: 0777736335** (C/40596) (24-18)

## அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

**தைப்பூச அன்னதானம்**

அம்பிகை அடியார்களே!

நாளை (25-01-2005) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கின்ற தைப்பூசப் பெருவிழாவை முன்னிட்டு, அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வழமைபோல் எமது சபையால் அன்னதானம் வழங்குவதற்கு சகல ஒழுங்குகளும் செய்துள்ளோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றையதினம் அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்கள் தவறாது எமது சபைக்கு வந்து அன்னதானத்தில் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: அடியார்களின் பிரயாண வசதிகருதி மு.ப. 11 மணிக்கு அன்னதானம் ஆரம்பிக்கபபடும்.

அமுதசுரபி அன்னதான சபையினர்.
கு.சாந்தலிங்கம், செயலாளர்.
(41128)(26-18-24)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**BBSU நிறுவனம்,**
**பணிப்பாளர்.**



கண்ணாடி இழையினாலான மீன்பிடிப் படகுத் தொழிற்சாலை ஒன்று வெகுவிரைவில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கின்றது. அதற்குத் தகுந்த அனுபவமுள்ள தொழிலாளர்கள் மற்றும் இளம் பயிற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேர்வு செய்யப்படுபவர்களின் அனுபவம், திறமைக்கேற்ப வேதனம் ரூபா 25,000.00 வரையும் வழங்கப்படும். அத்துடன், பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிக் கால வேதனமும் வழங்கப்படும்.

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நேர்முகத் தேர்வு: 26.01.2005
இடம்: பொருண்மியமதியுரையகம், இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி
நேரம்: காலை 09.00 மணி தொடக்கம்

- தங்களது தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.
- மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பொருண்மிய மதியுரையகம்.
இரணைமடுச் சந்தி.
கிளிநொச்சி.

**T.P.: 021 228 5009**
(சி-40607) (24-18)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தம்பிஐயா

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது பிரான்ஸில் வசித்துவந்தவரான வேலுப்பிள்ளை தம்பிஐயா அவர்கள் 19.01.2005 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தில்லைவனம் தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லதங்கம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இமாலயதேவி, தேவராஜா (ஜேர்மனி), சிவகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (சுவிஸ்), மல்லிகாதேவி (பிரான்ஸ்), ஜெயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் விசாலாட்சி, காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் நாகேசு ஆகியோரின் அருமைச் சகோதரனும் கலாராணி, நித்தியகலா, சுகந்தி, பற்குணசிங்கம், பிரேமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.01.2005 புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரான்ஸ்.*
T.P.: 0141570716
(41208) (24-18)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## புதிய மாணவர் அனுமதி

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சி, வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்றிற்கான புதிய மாணவர்களை அனுமதிக்கும் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு அதிபர் ஏ.கே.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த-323)

## காளை அடக்கும் பயிற்சியில் ஸ்கந்தபுரம் இளைஞர்கள்!

முழங்காவில்,ஜன.24

காளை அடக்கும் போட்டி இந்தியாவில் மிகவும் பிரபல்யமானது. இலங்கையைப் பொறுத்தவரை அதில் பெரிதாக எவரும் ஈடுபடுவது கிடையாது.

ஆனால், இப்போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்கந்தபுரம் கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் காளை அடக்கும் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றனர். மேற்படி பிரதேச வீதியில் இளைஞர்கள் காளையை அடக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இதனை வேடிக்கை ஏராளமான மக்கள் திரண்டிருந்ததைக் காணமுடிந்தது.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து இப்போட்டியை நடத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(த-223-204)

## பூநகரி விக்கினேஸ்வராவில் இருமாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

வேரவில்,ஜன.24

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 'காப்' திட்டத்தின்கீழ், நிக்கொட் நிறுவனத்தின் அனுசரணையுடன், இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தயடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றன.

பாடசாலை அதிபர் க.ஞானசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், 'நிகொட்' பிரதித் திட்டமிடற்பணிப்பாளர் க.பார்த்தீபன், பூநகரிப் பிரதேச செயலர் ம.ஸ்ரீஸ்கந்தகுமார், பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் நி.கணபதிப்பிள்ளை, கிளிநொச்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-323-204)




## கண்ணாடி இழைப்படகு தயாரிக்கும் தொழிற்சாலை கிளிநொச்சியில்

### பொருண்மிய மதியுரையகம் ஏற்பாடு

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சியில் கண்ணாடி இழையிலான மீன்பிடிப் படகுத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க பொருண்மிய மதியுரையகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது தொழிற்சாலையில் இணைந்து வேலைசெய்யக்கூடிய அனுபவமுள்ள தொழிலாளர்களையும் பயிற்சியாளர்களையும் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ள இத் தொழிற்சாலையின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதோடு, சிதைந்துபோன கடற்றொழிலும் மேம்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-204)



வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் 490 குடும்பங்களுக்கு உடுத்துறை சுமை தாங்கிக் கிராமத்தில் தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அங்கு அமைக்கப்பட்டுவரும் கூடாரங்களில் சிலவற்றைப் படத்தில் காணலாம். *(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து தொடர்ந்தும் சடலங்கள் மீட்பு!

### முல்லைத்தீவுக் கரையோரங்களில்

புதுக்குடியிருப்பு,ஜன.24

சுனாமிப் பேரலையால் சிக்கி இறந்தவர்களின் சடலங்கள் தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருகின்றன.

கடந்த 18ஆம் திகதி, 20ஆம் திகதிகளில் கரைச்சிக் குடியிருப்பு வயலில் இருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்ட மீட்புப் பணிகளின்போதே மேற்படி சடலங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த-203-353)

## பல்லவராயன்கட்டு வீதி சேதம்

முழங்காவில்,ஜன.24

பல்லவராயன்கட்டு ஊடாக வலைப்பாடு செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுவதால், பயணஞ்செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக, வெள்ளம் இவ்வீதியை ஊடறுத்துப் பாய்ந்தது. இதனால், ஆங்காங்கே பாரிய பள்ளங்கள் தோன்றியுள்ளன.

இவ்வீதியில் உள்ள கிடங்குகள் இப்போது தென்னம்பொச்சு மட்டைகள போட்டு நிரப்பப் பட்டுள்ளன.

இதனால், இவ்வீதியால், கனரக வாகனங்களோ, அவசர போக்குவரத்து வாகனங்களோ பயணஞ்செய்ய முடியாதநிலை தோன்றியுள்ளது.

பிரதான போக்குவரத்து வீதியாகத் திகழும் இவ்வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை, இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(த-323-204)



கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுண்டிக்குளம் பிரதான வீதி, கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## கிட்டு உட்படப் பத்து வேங்கைகளுக்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலி நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஜன.24

கேணல் கிட்டு உட்படப் பத்து வேங்கைகளின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் இளஞ்செழியன் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் செல்வம் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து ஈகச்சுடர் ஏற்றிவைத்தார்.

புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லை.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லை.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் உபசெயலாளர் செல்வநாயகம், மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

(த-203-353)

## கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வேரவில்,ஜன.24

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் கற்றல் உபகரணங்களை கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கியுள்ளது.

இக்கற்றல் உபகரணங்கள் வேரவில் இ.ம.வித்தி, வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை, பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாசாலை முழங்காவில் ம.வி., நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, குமுழமுனை அ.த.க.பாடசாலை, ஜெயபுரம் அ.த.க.பாடசாலை, பல்லவராயன்கட்டு அ.த.க. பாடசாலை, பூநகரி ம.வி., பள்ளிக்குடா அ.த.க.பாடசாலை, விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

(த-323-204)

## கிளிநொச்சி நகரில் இரவிலும் காவல்துறையின் வீதிக் கடமை

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சி நகர்ப்பகுதிகளில் அண்மைக் காலமாக வாகனங்களின் நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால், இரவு நேரத்திலும் அங்கு காவல்துறையினர் வாகனங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுதொடர்பாகக் கிளிநொச்சிக் காவல்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் தெரிவிக்கையில் - அண்மையில் கனரக வாகனங்கள் மற்றும் நிவாரணப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் என்பன இரவு நேரங்களிலும் போக்குவரத்தில் ஈடுபடுவதால் வாகன நெரிசல் காணப்படுகின்றது.

இதனால், விபத்துகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றைக் குறைக்கும் முகமாகவே நாம் இரவு நேரங்களிலும் கடமையில் ஈடுபட்டு வருகின்றோம்.

அத்துடன், விபத்துச் சம்பந்தமாகப் பல பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் நிலையங்களில் கருத்தூட்டல் வகுப்புகளையும் நடத்தி வருகின்றோம் - என்றார்.

(த-203-305)






அண்மையில் குமுழமுனை புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் இடம்பெற்ற சர்வமத வழிபாட்டின்போது இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், மதத் தலைவர்கள் பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும், வழிபாட்டில் கலந்துகொண்ட மதத் தலைவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (த-323-404)

## பூநகரிக் கோட்ட பாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள்

முழங்காவில்,ஜன.24

கிளிநொச்சி மாவட்டப் பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கு பூநகரி மகா வித்தியாலயத்தில் வைத்து இலவசப் பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த இலவசப் பாடநூல்களை வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, குமுழமுனை, பல்லவராயன்கட்டு, ஜெயபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, நாகபடுவான் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் உட்படப் பல பாடசாலைகள் பெற்றுக்கொண்டன.

(த-203-323-404)




*யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகத்தின் அதிதிப் பேச்சாளர் தினத்தின்போது, கழக முன்னாள் தலைவர் எஸ். முரளிதரன் றோட்டரிக்குடும்பம் என்ற தலைப்பில் அங்கத்தவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகிறார்.* (ப)

## கருக்... ...த்தாளர் சங்கப் பொ... ...ட்டம்

...ழ்ப்பாணம்,ஜன.24

வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழகத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(த-202)

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு சுழற்சிமுறையில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் சிற்றூழியர்களுக்கு சுழற்சிமுறையில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சகல சிகிச்சை பிரிவுகளிலும் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கும் இவ்வருடத்தில் இவ்வாறு சுழற்சி முறையில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-139-204)

## துப்புரவுப் பணிக்கு உபகரணங்கள் இல்லை

குருநகர்,ஜன.24

சின்னக்கடைப் பொதுச்சந்தையில் துப்புரவுப் பணிசெய்வதில் உரிய உபகரணங்கள் பற்றாக்குறையால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பெருஞ்சிரமமடைகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீன் விற்கும் இச்சந்தையில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படாது தடுக்க வேண்டுமானால் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

இத்துப்புரவுப் பணிகளைச் செய்ய போதிய உபகரணங்கள் இன்மையால், உரியமுறையில் துப்புரவு செய்யமுடியவில்லை எனவும், வாளிகள் மற்றும் கழுவுவதற்கேற்ற உபகரணங்கள் என்பவற்றைச் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுத்தர வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கேட்டுள்ளனர்.

(த-51-204)

## தொழில் பயிற்சி நிலையம் சாவகச்சேரியில் திறப்பு

தென்மராட்சி,ஜன.24

தென்மராட்சிப் பிரதேச இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அண்மையில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை அரச தொழிற்பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் பிரதேச செலகத்தினால் பயிர்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக தசசுத் தொழில் பயிற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்கள் பயிர்சி நிலையத்தில் இம்மாதம் 31 ஆம் திகதி வரை இணைந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-11)

## வலுவிழந்தோருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வலி.தெற்கு,ஜன.24

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வலுவிழந்தோருக்கு வழங்குவதற்கென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆறு மூன்று சில்லுச் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

இவற்றைக் கடந்த வாரம் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தில் வைத்து உதவிப் பிரதேச செயலர் த.மஞ்சுளாதேவி வலுவிழந்தோர்களுக்கு வழங்கினார்.

(த-203-152)


மகளிர்களுக்கான வகுப்புகளும் சேவைகளும்
தைப்பூச தினமான 25-01-2005 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
மங்களகரமாக ஆரம்பம்

அழகுக்கலை வகுப்புகள்:

1.Advance Course (3மாதங்கள்) சான்றிதழ் வழங்கப்படும்
2.Diploma Course (2மாதங்கள்) சான்றிதழ் வழங்கப்படும்
3.One Month Course (ஒரு மாதம்) சான்றிதழ் இல்லை

ஆசிரியர்: திருமதி B.அகிலா (Moon Beauty Corron)
(இயக்குநர் - நடன ஆசிரியை)

சகல விதமான தையல் பயிற்சி வகுப்புகளும்
குழந்தைகள், சிறுவர், சிறுமியர், மகளிர்களுக்கான ஆடைகள்
நவநாகரிகமான விதங்களில் தைத்தல்
ஆசிரியர்: திருமதி ட.தயாநிதி
(ஜெயா தையலகம், மானிப்பாய்)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம்,
பூவேலை போன்ற வகுப்புகள
ஆசிரியர்: செல்வீ S.காந்தரூபி.

சகல விதமான மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், உடைகள் தைத்தல் முதலிய ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

R.T.R. அழகுக்கலை நிலையம்
பிரதான வீதி, மானிப்பாய்.
T.P.No. 0777 677079, 0777 570138.
(26-14-18) (சி-40608)



வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில்
புதுயுகம் படைக்கும்

அசிதுவா இன்டர்நெஷனல் தமது சேவையினை
நாடு முழுவதும் விஸ்தரிக்க

முகவர்களை (Sub Agents)
அழைக்கின்றது

டுபாயில் அமைந்துள்ள
ஷான் இன்டர்நெஷனலின்
இலங்கைக் கிளையான
அசிதுவா இன்டர்நெஷனல்
தமது நிறுவனத்துக்கான
புதிய முகவர்களை தம்மோடு
இணைத்துக்கொள்ள
விரும்புகின்றது.

இன்றே
இணைந்திடுங்கள்

Assidua International (Pvt)Ltd.
The Force behind your workforce

இல.149, 3ம் மாடி, காலி விதி, தெஹிவளை தெற்கு.
(ஆர்பிகோ காட்சியறை அருகில்)
தொலைபேசி : 011 2735098, 2735100
பக்ஸ் : 011 2735099 ஈ-மெயில் : assidua@sltnet.lk
Piccaso


## கண்ணீர் அஞ்சலி

2005.01.22இல் சிவபதமடைந்த எமது உறவினரும், எனது ஆசிரியருமாகிய மட்டுவிலைச் (ஆயத்தடி) சேர்ந்த
ஓய்வுபெற்ற ஆசிரியர்

### க.காசிநாதர்

அவர்களின் ஆன்மசாந்திக்க்காகப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் அமரரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வெள்ளவத்தை - மட்டுவில்
திருமதி அ.சுப்பிரமணியமும்,
சிவா குடும்பத்தினரும்.
(40612)

## கண்ணீர் அஞ்சலி

2005.01.22 இல் சிவபதமடைந்த மட்டுவிலின் மைந்தனும்
எமது உறவினருமாகிய
ஓய்வுபெற்ற ஆசிரியர்

### க.காசிநாதர்

அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் அமரரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-40611) மட்டுவில் ஆ.நடராசா குடும்பம்.

## நெஞ்சை விட்டகலா பத்தாம் ஆண்டு நினைவலைகள்



### கணேசன் இலங்கேஸ்வரன்

(ஈசன்)
யாழ்.மத்திய கல்லூரி
மாணவன்
தாயக மண்ணில்
04-12-1976
இறைவனின் நிழலில்
24-01-1995

திதி: 02.02.2005

ஈசா!
பத்தாண்டு நினைவுக்குள்
பிறையோடினாலும் எம்
உணர்வுகள் மரணிப்பதில்லை
குமுறி எழும் உணர்வுக்குள்
நாளும் பொழுதும்
வாழுகின்றோம்.
மறுபிறவி எடுத்து நம்
உறவுக்குள் மலராயோ?
காத்திருக்கின்றோம்
உன் வரவுக்காய்!

த.மு:
D8, ஆனந்தன் பண்ணை,
உபதபாலகம்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

உன் மறுபிறப்புக்காய் காத்திருக்கும்
குடும்பத்தினர்.

(41...)(29-14-18-26)

## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா மயூரன்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா மயூரன் (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா - இரத்தினம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் துளசிகா, லக்ஸ்மன் (லக்கு - மாநகர சபை ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரனின் மைத்துனரும் தட்சாயினியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பு,தவுடல் தகனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தில்லையம்பதி,*
*கோண்டாவில் வடக்கு.*
(41216)(26-14-18)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி

(காரைநகர்)



யாழ்ப்பாணம் இல.114/3, பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி 21-01-2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி ஆறுமுகம் கனகசபை களபூமி, காரைநகர் தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமிர்தானந்தன் (ஆஸ்திரேலியா), ஆனந்தகுமார் (கனடா), சிவகுமார், கமலாம்பிகை (கனடா), அருளாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாரதாதேவி, சிற்கலாயாழினி, விஜயலஷ்சுமி, தவனேஸ்வரன், பத்மசிறிரங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபனா, அபி, நிவாசினி, தனுஜா, சுபோ, ஆரணி, சிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் பரமேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தையல்நாயகி பரமலிங்கம், கௌரீஷ்வரி பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

114/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(41213)(26-14-18)
தகவல்:
கே.எஸ்.கணபதிப்பிள்ளை
(கணவர்),
க.சிவகுமார் (மகன்).



சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவையையொட்டி இரண்டு நூல்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நூல்வெளியீட்டு விழாவில் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆசியுரை வழங்குவதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத்தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், மூத்த எழுத்தாளர் சிற்பி ஆகியோர் அமர்ந்திருப்பதை முதற்படத்திலும் ஜேர்மன் நாட்டில் வசிக்கும் குரும்பசிட்டியைச் சேர்ந்த கலாநிதி மு.க.சிவகுமாரன் எழுதி வெளியிட்ட 'சிவத்தமிழ' என்னும் நூலை விழா நாயகியிடம் அவர் கையளிப்பதையும், நூலின் சிறப்புப் பிரதியை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நூலாசிரியர் சிவகுமாரிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

படங்கள்:வலி.வடக்குச் செய்தியாளர்.

## மழைவெள்ளத்தினால் கோப்பாயில் பயிரழிவு ஏற்பட்டால் பதிவு செய்க

வளலாய்,ஜன.24

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மழை வெள்ளத்தினால் பயிரழிவுகள் எற்பட்டிருந்தால் அது தொடர்பான விவரங்களை உடன் ...பிவைக்குமாறு பயிர்ச்செய்கைப் போதனா... கேட்டுள்ளார்.

...து தொடர்பாக அவர் சகல கிராம அலு...கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ...றும் விவசாய சம்மேளனங்களுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்துடன் இராணுவக்காவலரண்கள், மிதிவெடிகள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்பனவற்றின் காரணத்தால் பயிர்ச் செய்கை நிலங்களில் செய்கைபண்ண முடியா திருந்தால் அது தொடர்பான விவரங்களையும் தமக்கு அனுப்பிவைக்குமாறு அவர்மேலும் கேட்டுள்ளார்.

(த-203-178)

## அந்தணர்களுக்குச் சமாதான நீதிவான் பட்டம் அமைச்சர் டக்ளஸிடம் ஸ்ரீவித்யாபீடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.24

அந்தணர்கள் சமூகப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் வகையில் அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவித்யா சர்வதேச இந்துமத பீடம் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

ஸ்ரீவிதயா சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் ஆர்.பாபுசர்மா அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அந்தணர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்குவதாக உறுதியளித்துள்தாக செயலாளர் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது ஸ்ரீவித்யா குருகுல மாணவர்களின் வேத ஆகம கல்வியை மேம்படுத்தும் முகமாக நிதியினைப் பெற்றுத்தருமாறும் பீடச்செயலாளர் அமைச்சரிடம் கேட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

(10-13)

## யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் 'ஆற்றுகை' இதழ் வெளிவந்தது

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் வெளியீடான ஆற்றுகையின் பன்னிரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

நாடக அரங்கியலுக்கான இந்த இதழில் சி. ஜெயசங்கர், கலாபூஷணம் முல்லைமணி, யோ...சன்ராஜ்குமார், அ.ஜெகன்தாசன், கல...ஷணம் ஜி.பி.பேர்மினஸ், அரங்கநேசன், முல்லை... கே.ஏ.குணசேகரன், பிரான்சிஸ் அமல்ராஜ், தார்மிகி, கி.செல்மர் எமில் ஆகியோரது ஆக்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன. நாடகத்துறை சார்ந்த செய்திகள், புகைப்படங்கள், விமர்சனங்கள், நேர்காணல்கள், கட்டுரைகள் எனப் பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

(த)

## நயினையில் நாளை தைப்பூச உற்சவம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூச தினமான நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிமுதல் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விசேட அபிஷேகம் பூசை என்பன இடம் பெற்று அம்பாள் மஞ்சத்தில் வெளிவீதியுலா வருவார். தொடர்ந்து அமுத சுரபி அன்னதான சபையினரின் ஏற்பாட்டில் அன்னதானம் இடம்பெறும்.

தைப்பூச உற்சவத்தில் கலந்து கொள்ள வருகை தரும் அடியவர்களின் நலன் கருதி விசேட பஸ்சேவை, படகுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(எ)

## சைவசமய தீட்சை

திருநெறிய தமிழ்மறைக்கழகத்தினரால் நாளை (25.01.2005) செவ்வாய்க்கிழமை தைப்பூச நன்னாளில் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலில் காலை 8.00 மணிக்கு சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும். இதுவரை சமயதீட்சை பெறாதவர்கள் இதில் பங்கேற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- கழகத்தினர்.

## வல்லை பாடசாலைகள் ஆரம்பம்

கரவெட்டி,ஜன.24

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும் வல்வை மகளிர் மகாவித்தியாலயமும் நாளை செவ்வாய்க கிழமை ஆரம்பமாகவுள்ளன.

சுனாமியினால் பாதிப்புற்ற மக்கள் இந்த இரு பாடசாலைகளிலும் தங்கியிருந்தமையால் இவ்வளவு நாளும் பாடசாலைகள் நடைபெறவில்லை.

எனினும் இன்றுமுதல் இப்பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்கள் அருகிலுள்ள தனியார் வீடுகளில் தங்கவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(10-13-70)

## இராணுவத்தினர் பாதுகாப்புப்பணியில்

பருத்தித்துறை, ஆத்தியடியிலுள்ள 'ரெலிகொம்' வளாகத்திலும், மாலுசந்தியில் உள்ள 'டயலொக்' நிறுவன வளாகத்திலும் கடந்த இருதினங்களாக இராணுவ பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரவு, பகலாக இராணுவத்தினர் மேற்படி இரு வளாகங்களிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். திடீரென இப்பாதுகாப்பு போடப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது.

(10-13-70)

## கருத்தரங்கு

'கியூடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கியூடெக் கிறிஸ்துராசா சமாதானக்குழுவினினால் சில்லாலை தெற்குப்பகுதி இளைஞர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் சில்லாலை யாகப்பர் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

(த-203-190)


## ...த்துமாறல்

...தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக (மத்திய அரசு) எழுதுவினைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்...ல் இதே தரத்திலுள்ள ஒருவருடன் ...த்தும...ற விரும்புகின்றார்.

...: 222 7027(யாழ்ப்பாணம்),
024 222 2577 (வவுனியா).

## ...rsonal Class

...திய மென்பொருட்களுடன்
புதிய ...தொழிநுட்ப வளர்ச்சியில்
Video Mixing
Studio Designing
தொடர்புகளுக்கு: 077-6914059

## பதவி வெற்றிடம்

1) கணனி செயன்முறை பயிற்றுவிப்பாளர் [Computer Instructor]
2) அலுவலக எழுதுநர் [Clerk]

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான தகுதியுள்ள துடிப்பான இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

3 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்

Director
College of Computer
K.K.S Road, Inuvil. T.P:222 7643


## உ
## ௐ
ஸ்ரீராமஜெயம்

## யாழ். - வண்ணை
## ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
## விசேட பிரார்த்தனை நிகழ்வு

கடந்த 26.12.2004 நிகழ்ந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பலியான மக்களின் ஆத்மா சாந்தியடையவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆத்ம பலம் வேண்டியும் மேற்படி தேவஸ்தானத்தில் தாரணவருஷம் தை மாதம் 13ஆம் நாள் (26.01.2005) புதன்கிழமை காலை 6.45 மணிக்கு நடைபெறும் பூஜையுடன் மோட்ச தீபம் ஏற்றப்பட்டு தொடர்ந்து காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் மோட்ச அர்ச்சனையும் நடைபெற்று 10.30 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனை (பஜனை) நிகழும்.

அடியார்கள் யாவரும் வந்து மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.
யாழ்ப்பாணம். (சி-40614)(43-11-15) ஆதீன மஹாசபை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி பா.அஜீஸ்கா
பிறப்பு 08.03.2002



திருமதி பா.விநோதினி
பிறப்பு 05.03.1989



செல்வன் பா.அஜீஸ்காந்
பிறப்பு 14.4.2004

இறப்பு:26-12-2004

அன்பான உங்களை அலை அடித்துச் சென்றதால்
அகமுருகி மனம் வருந்தி ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (25.01.2005) செவ்வாய்க்கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தீருவில்,
வல்வெட்டித்துறை. (41222)(43-11-15)

அன்புக் கணவரும் தந்தையும்,
அ. பார்த்தசாரதி - மெக்கானிக்சாமி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்
## கணபதி மாணிக்கம்



மறவன்புலோ வடக்கைப் பிறப்பிடமாகவும் கேணியடி வீதி, மீசாலை மேற்கை வசிப்பிடமாவும கொண்ட கணபதி மாணிக்கம் (23-01-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் கணவரும் சற்குணபூபதி, அபிரஞ்சிதராணி, இந்திராதேவி, காலஞ்சென்ற சின்னராசா, செல்வரட்ணம் (சுவிஸ்), தெய்வேந்திரம் (பிரான்ஸ்), சிறிதரன், சந்திரவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசிங்கம (துணுக்காய்), இராசா (மட்டுவில்), காலஞ்சென்ற இராசதுரை, மெனிக்கா, விஜயா (சுவிஸ்), ஜெயக்கொடி (பிரான்ஸ்), மாலினி (ஆசிரியை, நோ.க.த.க மந்துவில்), விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும காண்டீபன், விமலன் (காங்கேயன் - மாவீரன்), பத்மரூபி (ஆசிரியை), காருண்யா, ஜீவிதா, சசிதரன், கமலதரன் (ஜேர்மனி), டினோதரன், தர்ஷன், தர்ஷினி, சுதா, வினோ, லக்சி,கஸ்ரோ, கெலின், லாவண்யா, சிறாஜினி, சருபன், சர்மிகா, தினேசிகா, தௌசிகா, சோமினா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2005) திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கேணியடி வீதி,
மீசாலை. (41220)(43-11-15)

தகவல்
சு.விவேகானந்தன் (மருமகன்).

## உணவு முத்திரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட நபர் 175 ரூபாவுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களையும் மிகுதி 200 ரூபாவுக்கு எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களையும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நிவாரண முத்திரைகள் கடந்த சனிக்கிழமை யாழ். செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. - என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-5)

## பீற்றர்ஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து இரு தலைவர்களும் பேசிய விவரங்களை அவர் தெரிவிக்கவில்லை.

ஆழிப்பேரலையால் சேதமான வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுமாறு நோர்வே அமைச்சரிடம் பிரதமர் கோரினார் என்றும் அதற்குப் பீற்றர்ஸன் தமது அரசு அந்த உதவியை வழங்கும் எனத் தெரிவித்தார் என்றும் வீரதுங்க கூறினார். (எ-க)

## ஜனவரி 26ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்தனர். மிகப் பெரும் பாதிப்பை ஆழிப் பேரலை ஏற்படுத்திச் சென்றுவிட்டது. இதனால் மீண்டும் எம் மக்கள் தமது வீடு, வாசல்களை இழந்தனர். உறவுகளையும் சொந்தங்களையும் இழந்து மனப்பாதிப்புக்கும் ஆளாகினர்.

இயற்கை அனர்த்தத்தாலும் அவர்கள் மீண்டும் நலன்புரி முகாம்களில் தமது உறவுகளுடனும் சொந்தங்களுடனும் தஞ்சம் புகுந்தனர்.

தமிழர் தாயகத்தில் உயிர் இழந்தோரினதும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் முழு தென்னாசியப் பிராந்தியத்திலும் உயிரிழந்தோரினதும் நினைவாக விடுதலைப் புலிகள் ஜனவரி 26 ஆம் திகதியை தேசிய துக்க தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

எம் உறவுகளினதும் மக்களினதும் துயரிலும் துக்கத்திலும் நாமும் பங்குகொள்வோம். சொந்தங்களை இழந்த எமது தோழர்களின் துக்கத்தில் நாமும் பங்கெடுத்துக்கொள்வோம்.

அன்றைய தினம் உலகில் தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் நினைவுச் சுடர் ஏற்றி இத்துக்கதினத்தை அனுஷ்டிப்போம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் அனுமதிக்காது.

அனர்த்தத்திற்குள்ளான வடக்கு - கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும், புனர்நிர்மாணம் செய்யவும் அரசுக்கு முடியுமாக இருக்கவேண்டும் எனவும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான மோதல் வலுத்து வருவதாகக் கூறப் படும் ஒரு நிலையில் சோமவன்ஸ இவ்வாறு கருத்துவெளியிட்டுள்ளார். ஆழிப் பேரலை நிவாரணப் பணிகளுக்காக புலிகளையும் இணைத்த பொதுக் கட்டமைப்பு ஒன்று பற்றி நோர்வே அனுசரணை யுடன் ஆராயப்படுகின்றது என்று செய்திகள் வெளியாகும் நிலையில் அவரது இந்தக் கூற்று மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (க-10)

## நஷ்டஈட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செயலகத்துக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக அக்கொடுப்பனவு உடனடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சுமார் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு கிடைக்கும். இக்கொடுப்பனவு தனிநபர் உள்ள குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதமும் அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் மக்கள் வங்கிக் கிளைகள் மூலமாக வழங்கப்படும். வங்கிக் கிளை இல்லாத பகுதிகளுக்கான கொடுப்பனவுகளை சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-5)

## சு.க.-ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக அக்கடிதங்களில் ஜே.வி.பி. நேரடியாகவே குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 19ஆம் திகதி ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் கட்சியின் செயற்குழு கூடியது.

அதில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் ஸ்ரீல.சு.கட்சியின் போக்கு அடியோடு மாறிவிட்டது. ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் பலரும் ஜே.வி.பியினரை உதாசீனப்படுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனர் - எனச் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் அங்கு கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

இதனை அடுத்தே ஜே.வி.பி. இரு காரசாரமான கடிதங்களை ஸ்ரீல.சு.கட்சிக்கு அனுப்பி வைத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அமைச்சுகளுக்கோ, அரச திணைக்களங்களுக்கோ புதிய நியமனங்களைச் செய்யும் போது ஜே.வி.பியுடன் கலந்தாலோசிக்கவேண்டும் என்பது உடன்பாடு.

ஆனால், ஸ்ரீல.சு.கட்சி ஆதரவாளர்களே பெரும் எண்ணிக்கையில் உயர் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அமைச்சர்களும் தன்னிச்சையாக நியமனங்களை வழங்குகின்றனர். அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவேண்டும் என உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அது மீறப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்படி கிராமிய மட்டத்தில் இருந்து விவசாயம், சிறு கைத்தொழில் மற்றும் உற்பத்தித்துறைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அவற்றிற்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும். ஆனால், அரசிடம் எந்த உருப்படியான திட்டங்களும் இல்லை எல்லாம் பேச்சளவிலும், அறிக்கைகளாகவும் மட்டுமே இருக்கின்றன. இவை அனைத்தும் ஸ்ரீல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உடன்படிக்கைக்கு முரணானவை. எனவே, ஸ்ரீல.சு.கட்சி தனது நிலைப்பாட்டைத் தெளிபடுத்தி விளக்கம் அளிக்கவேண்டும் என அதன் செயலாளருக்கு ரில்வின் சில்வா எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஜே.வி.பியின் செயற்பாடுகளுக்கு அரச ஊட கங்களில் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என நேரடியாக உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனையும் ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்துள்ளது. ஜே.வி.பி. அரசின் பங்காளிக் கட்சி மட்டுமல்ல, அரசுக்கும், ஜனாதிபதிக்கும் உயிரோட்டமுள்ள உந்துசக்தியைக் கொடுக்கும் கட்சி. உண்மை நிலை இப்படி இருக்க ஜே.வி.பியினர் மீது ஊடகத் தடை ஏற்படுத்துவதற்கான காரணம் என்ன என்பதை சு.கட்சி விளக்கவேண்டும் என மங்கள சமரவீரவுக்கு எழுதியுள்ள கடித்தில் ஜே.வி.பி. கேட்டுள்ளது.

இவ்விரு கடிதங்களுக்கும் உடனடியாகப் பதில் அளிக்க வேண்டும். இரு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தன்னிச்சையாக புறக்கணிக்கப்படுவதற்கான காரணத்தை அக்கட்சி தெளிவுபடுத்தவேண்டும். அதுவரை ஸ்ரீல.சு.கட்சியுடன் எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் இணைந்து செயற்படப் போவதில்லை என்றும் ஜே.வி.பி. அக்கடிதங்களில் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது. (எ-க)

## அனர்த்தப் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(கொன்சர்வேட்டிவ் கட்சி), ஜோன்ஜெக்கப்ஹறன் (இடதுசாரிக் கட்சி), மோர்டன் ஹொக்லன்ட் (புரேகிரசிங் கட்சி) ஆகியோரை கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பில் நோர்வே எம்.பிக்களுக்கு இலங்கை நிலையை விளக்கிய தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் அது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் இருந்துவரும் நிவாரண உதவிகள் நேரடியாகத் தமிழர் பகுதிகளுக்கு வழங்கப்படவேண்டும். அதற்காக ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். தனியே அரசிடம் நிவாரணங்களையும் நிதியையும் வழங்குவதை எம்மால் அனுமதிக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும் - அதுபோல் அதியுயர் இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்லவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு பிரச்சினைகளையும் பிரித்துப்பார்க்க முடியாது.

அகதிமுகாம்களைப் பராமரிக்க இராணுவம் நியமிக்கப்பட்டது. இதனால் தமிழர்கள் நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேறியுள்ளனர். எனவே ஆழிப்பேரலையைக் காட்டி இனப்பிரச்சினையைப் பின்போட முடியாது. என்று நோர்வே எம்.பிக்களிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

தமிழர் கூட்டமைப்பு சார்பில் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், மா.க. ஈழவேந்தன், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (க-10)

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரம் பற்றி அரச மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகங்கள் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் கிளிநொச்சியில் தெரிவித்திருந்தார். நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து கொழும்பு திரும்பியதும் அரச தரப்புடன் ஆராய்ந்த நோர்வேக் குழுவினர் இன்றைய சந்திப்பில் அது பற்றி விடுதலைப்புலிகளுக்கு விளக்குவார்கள் என்று தெரிகின்றது.

விசேட ஹெலியில் இன்று காலை 7.30 மணியளவில் ஹெல்கிஸனும், ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கிளிநொச்சியை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் அவர்கள் பின்னர் கொழும்பு திரும்பி அது குறித்து அரச தரப்புடனும் பேசுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று கொழும்பில் தங்கியிருந்த நோர்வேத் தூதுக் குழுவினர் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகள் மற்றும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான சூழலை ஏற்படுத்தல் என்பன தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்த நோர்வேக் குழுவினர் இது பற்றி விரிவாக ஆராய்ந்தனர். சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அரசு மற்றும் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் பற்றி நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற் றர்ஸன் இராஜதந்திரிகளுக்கு விளக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் விவரங்களையும் அவர் இராஜதந்திரிகளுக்கு விளக்கினார். (எ)

## ரணிலின், பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின் தலைமையில் அண்மையில் மூடிய அறைக்குள் நடந்த அதிமுக்கிய கூட்டத்திலேயே இந்த இரகசிய உளவுப்படை அமைக்கப்பட்டது என்று தகவல்கள் தெரிவித்தன.

ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பீ.கனேகல, தகவல் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.டி.பியசேன, பிரதிப் பணிப்பாளர் அலிஹஸன், இணைப்பதிகாரி பிரமாத் ஜயந்த ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனராம்.

அரச ஊடகங்களும், தனியார் ஊடகங்களும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருக்கும் மிதமிஞ்சிய முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. ஆனால், அரச தகவல் திணைக்கள அதிகாரிகள் இதனைத் தனது கவனத்திற்குக் கொண்டுவரத் தவறிவிட்டனர் என அமைச்சர் மங்கள அங்கு சீறிப்பாய்ந்துள்ளார். குறிப்பாக பிரதிப் பணிப்பாளர் அலிஹஸனிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை அவர் சரிவரச் செய்யத் தவறிவிட்டார் என அமைச்சர் பாய்ந்து வீழ்ந்தாராம்.

இனிமேல் அரச ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, லேக்ஹவுஸ் வெளியீடுகள் என்பனவற்றில் பிரதமரின் செய்திகள் வெளியிடுவதற்கு முன்னர் அதன் பிரதிகள் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டு முன் அனுமதிபெறப்படவேண்டும் எனவும், அதேவேளை, வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றில் பிரமருக்கு ஒதுக்கப்படும் நேரம் தொடர்பாகவும் தன்னிடம் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் அமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டுள்ளராம். (எ-க)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்லத்துரை (றோலர்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை (றோலர்) அவர்கள் நேற்று (23.01.2005) ஞாயிறுக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சந்திரசேகரம் (இளைப்பாறிய நடத்துநர் - C.T.B), பத்மநாதன் (அளவெட்டி - மல்லாகம், M.P.C.S), கமலாதேவி, சறோஜினிதேவி, தவேந்திரநாதன், குணசேகரம், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சிதமலர், சரசுவதி, சிவசேகரம், ஸ்ரீநிவாசன், சந்திரலேகா, லிங்காதேவி, தனலட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2005) திங்கட்கிழமை நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீலியம்பனை,*
*மல்லாகம்.* (41225)(30-11-15)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பெரியதம்பி முத்தம்மா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் இராச வீதி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெரியதம்பி முத்தம்மா நேற்று (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பியின் அன்பு மனைவியும் சின்னம்மா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற தவகுலநாதன் (மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மலிங்கம், மலரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜேஸ்வரன் (ஹொலன்ட்), செல்வராசா (U.K), ரங்கநாதன் (கனடா), சிறிதரன் (U.K), மாலதி (ஜேர்மனி), சுதாகரன் (இத்தாலி), பிரேமச்சந்திரன் (இத்தாலி), லோசினிதா (வவுனியா), கஜமுகன், சிவேந்தின், சிவனிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2005) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*கோப்பாய்.* (சி-40616)(30-11-15)

தகவல்:
தர்மலிங்கம் (மருமகன்).

### திருமதி சோதிமணி கனகசுந்தரம்

காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிமணி கனகசுந்தரம் நேற்று (23.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய தபாலதிபர் கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும் அற்புதமலர் (கனடா), சிவமலர் (பிரான்ஸ்), அற்புதராசா (ஜேர்மனி), ஆனந்தராசா (ஆனந்தன் தொலைத் தொடர்பு நிலையம், காரைநகர்), சிவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*நடுத்தெரு,*
*காரைநகர்.*
(சி-40617)(30-11-15)

தகவல்:
அ.கனகசுந்தரம்
(இளைப்பாறிய தபாலதிபர்).






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.